
உ

சிவமயம்

# மாண்புறு மட்டுவில்



மட்டுவில்

## உயர்திரு.காசிநாதர் சிவஞானசுந்தரம்

அவர்களின்

# மணிவிழாச் சிறப்புமலர்

30.10.2016

உ

சிவமயம்

# மாண்புறு மட்டுவில்

இஃது

மட்டுவில்

உயர்திரு. காசிநாதர் சிவஞானசுந்தரம் அவர்களது

மணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்பட்டது.

வெளியீடு:

**மணிவிழாக் குழுவினர்**

**30-10-2016**

நூலின் பெயர்: ‘‘மாண்புறு மட்டுவில்’’
(மட்டுவில் உயர்திரு. காசிநாதர் சிவஞானசுந்தரம் அவர்களது மணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்பட்டது.
பதிப்பாசிரியர்: ச. லலீசன் (கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை பிரதி அதிபர்)
வெளியீடு: மணிவிழாக்குழு, சாவகச்சேரி.
பக்கங்கள்: 64
நூலின் அளவு: B5 எழுத்துரு: 12
பிரதிகள்: 500
அச்சமைப்பு: சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ் - கோண்டாவில்
பதிப்பு: 30-10-2016



மணிவிழா நாயகன்

# மணிவிழாக்குழு

கௌரவ தலைவர்: திரு. ந. சர்வேஸ்வரன்
(அதிபர்,யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

செயலாளர்: திரு. த. நாகேஸ்வரன்
(தலைவர், தனியார் கல்வி நிறுவன ஒன்றியம், சாவகச்சேரி)

கௌரவ பொருளாளர்: திரு. செ. சுதாகரன்
(பிரதம முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி)

**செயற்குழு**

லயன் டாக்டர் சு. சி. அருளானந்தம்

திரு. யோ. ஜெயக்குமார் (ஓய்வுநிலை பதிவாளர் யாழ். பல்கலைக்கழகம்)

திரு. இ. இரவீந்திரன் (ஓய்வுநிலை அதிபர்)

திரு. அ. கயிலாலயபிள்ளை (ஓய்வுநிலை அதிபர்)

திரு. ந. ஜெயகுமாரன் (அதிபர், யா/ டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி)

திரு. செ. சுப்பிரமணியம் (ஓய்வுநிலை அதிபர்)

திரு. ச. லலீசன் (பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை)

திரு. க. எழிலழகன் (அதிபர், யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்)

திரு. வ. ஸ்ரீபிரகாஷ் (உபதலைவர், கைத்தொழில் வணிகர் மன்றம்)

திரு. க. அருந்தவபாலன் (ஓய்வுநிலை அதிபர்)

திரு. க. க. ஈஸ்வரன் (தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி, தென்மராட்சிக் கல்வி வலயம்)

திரு. க. கனககேஸ்வரன் (பிரதேச செயலர், மருதங்கேணி)

திரு. ச. தயாபரன் (முகாமைத்துவ உதவியாளர், பேரவைச்செயலகம், வடக்கு மாகாணம்)

திரு. துரை. இளங்குமரன் (விரிவுரையாளர் கல்வியியற் கல்லூரி யாழ்ப்பாணம்)

திரு. சி. கமலரூபன் (பிரதேச செயலகம், தென்மராட்சி)

திரு. ஆ. தங்கவேலு (அதிபர், யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை)



மணிவிழாத் தம்பதியர்

திரு.திருமதி.சிவஞானசுந்தரம் விமலினி
தம்பதியினர்

# எம்மை வாழவைத்த தெய்வங்கள்



ஆன்மீக அன்னை
சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

வாழ்வக அன்னை
செல்வி. அன்னலட்சுமி சின்னத்தம்பி






சிவஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள் தம்பதியினர்.



திரு. காசிநாதர் தம்பதியினர்.



## திருக்கணித பஞ்சாங்க கணிதரின்
# ஆசிச்செய்தி

"ஜோதிடமணி" பிரம்மஸ்ரீ சி. ஜெகதீஸ்வரசர்மா
107, W. A. சில்வா மாவத்தை
வெள்ளவத்தை, கொழும்பு - 6

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதலின்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க மட்டுவில் வடக்கில் காலஞ் சென்ற காசிநாதர் ஆசிரியர் தம்பதிகளுக்கு கனிஷ்ட புத்திரனாகத் தோன்றி தென்மராட்சி எங்கும் தனது சேவையையும், செயற்திறனையும் விரிவாக்கி வருபவர் திருவாளர் சிவஞானசுந்தரம் அவர்கள்.

சிலர் இறந்த பின்னர்தான் அவர்களது செயற்பாடுகளும், நடைமுறைகளும் சிறப்புப்பெறும். ஆனால் வாழும்போதே தனது செயற்திறனால் மதிக்கப்படுபவர் சிவஞானசுந்தரம் அவர்கள். சிறுவயதில் என்னுடன் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஒன்றாக கல்வி கற்றவர். அதன் பின் எமது அச்சகத்தில் ஒரு ஊழியனாகச் சேர்ந்து தொழிலாளி போன்றல்லாமல் ஒரு சகோதரன் போன்றே செயற்பட்டு எமது மனதில் ஒரு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருந்தார். கடமையுணர்வும் செயற்திறனும் மிக்கவராகவே எமது நிறுவனத்தில் தொழில் புரிந்தார். இவரின் திறமை காரணமாகவே தற்போது சாவகச்சேரியில் இயங்கும் எமது அச்சகத்தை நிர்வகிக்கும் பொறுப்பைக் கொடுத்துள்ளோம். அச்சகவேலை மட்டுமன்றி எமது இல்லத்தில் நிகழும் சகல நன்மை, தீமையான விடயங்களிலும் முன்னின்று மனங்கோணாமல் கருமமாற்றி வருபவர். எமது தந்தையார் நோய் வாய்ப்பட்டிருக்கும் காலத்திலும் சரி, அவரின் மரணத்தின் போதும் சரி எவ்வெவ் விடயங்கள் செய்யப்படவேண்டுமோ அவற்றை உரிய நேரத்தில் கவனித்துச் செயற்பட்டமையை என்றும் மறக்க முடியாது.

தான் பிறந்த மட்டுவிலிலுள்ள குலதெய்வமாகிய பன்றித்தலைச்சிக்கண்ணகை அம்மன் ஆலயத்தில் வருடந்தோறும் நிகழும் மகோற்சவம், பங்குனித்திங்கள் உற்சவம் என்பவற்றில் தவறாது கலந்து கொண்டு அம்மன் மீதுள்ள பயபக்தியை அனைவருக்கும் நம்பிக்கையூட்டி மகிழ்வார். அத்துடன் தற்போது தான் வாழுகின்ற கல்வயலில் உள்ள புலுட்டையன் பிள்ளையார் ஆலயத்திலும் ஆலய பரிபாலகருடன் இணைந்து பலவிடயங்களை முன்னெடுத்து வருபவர். எவ்விடம் சென்றாலும் புன்முறுவலுடன் கூடிய சிரிப்பால் பிறரைக் கவர்ந்து அந்நியோன்யமாகப் பழகும் தன்மை வாய்ந்தவர். இதனால் சாவகச்சேரியிலுள்ள கல்லூரிகளின் வளர்ச்சியில் ஈடுபாடு, பலவித அமைப்புக்களின் நிர்வாகப்பொறுப்பு என்பவற்றில் தனது பங்களிப்பைச் செய்து வருவதில் முன்னோடியாகத் திகழ்கின்றார்.

இவ்வாறு பலவிதத்திலும் சிறப்புக்கள் கொண்ட சிவஞானசுந்தரம் அவர்களுக்கு 60 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டமையை அவரின் தோற்றம் ஏற்க மறுக்கின்றது. எனினும் அவரின் சேவைக்கு மணிவிழா என்பது செய்யப்படவேண்டிய ஒன்றாகும். மட்டுவில் ஊருக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் உருவான "மாண்புறு மட்டுவில்" என்னும் நூல் மட்டுவில் பிறந்து கௌரவம் பெறும் சிவஞானசுந்தரம் அவர்களின் மணிவிழாவில் வெளியிடப்படுவது சாலவும் பொருத்தமானதாகும்.

இன்று நிதழ்த்தப்படும் மணிவிழா சிறப்புற விளங்கவும் மட்டுவிலின் வரலாற்றைத் தெரிவிக்கும் **"மாண்புறு மட்டுவில்"** என்னும் நூல் பலருக்கும் பயன்தரும் அறிவுப் பொக்கிஷமாக அமையவும் நல்லாசி வழங்குகின்றேன்.

வணக்கம்

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
CHINMAYA PRAGATI : NO.32, 10TH LANE, OFF SCHOFIELD PLACE, COLOMBO 03, SRI LANKA. TEL : + 94 11 259 1344
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

சின்மய ஞானவேல்
இல 9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# ஆசிச்செய்தி

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயச் சூழலில் பிறந்து அம்பாளின் அருட்கடாட்சத்துக்கு உட்பட்டு, தனது தன்னலமற்ற சேவையால் உயர்ந்து நிற்கும் காசிநாதர் சிவஞானசுந்தரம் ஐயா அவர்கள் இன்று 30.10.2016 இல் மணிவிழா காண்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

"பலனில் பற்றின்றி நான் செய்கின்றேன் என் உணர்வின்றி, சுயநலமின்றி, பொதுநலத்துக்காக, ஈஸ்வரார்ப்பண புத்தியுடன் செயலாற்றும்போது அவை சிறந்து விளங்கும்" என பகவான் கிருஷ்ணர் ஸ்ரீமத் பகவத்கீதையில் கூறுகின்றார்.

மட்டுவில் இந்து இளைஞர் சங்கம் மற்றும் திருக்கணித அச்சகம் ஆகியவற்றில் முக்கிய பணிகளை ஆற்றிவரும் இவரது சேவை தொடரவும் மணிவிழா சிறப்பாக நடைபெறவும் இதனை முன்னிட்டு வெளிவரவுள்ள மணிவிழா மலர் "**மாண்புறு மட்டுவில்**" சிறப்பாக வெளிவரவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல இறைவனையும், பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மானந்தர் அவர்களையும் பிரார்த்திக்கின்றோம்.

**இறைபணியில்**

**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா**
**வதிவிட ஆசாரியார் சின்மயா மிஷன்**




# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com

T.P No : 021 - 3213151

திகதி: 25/10/2016

Fax:- 021 2241909

தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511


## செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனையுரை

சைவநெறி காத்த சான்றோர் வாழ்ந்த புண்ணியபூமி மட்டுவில். குடாநாடே திரண்டு பொங்கிப் படைக்கும் பன்றித்தலைச்சி அம்பாள் குடிகொண்ட திருவூர். இத்திருவூரில் சைவப்பாரம்பரியம் காத்த குடும்பத்தில் உதித்தவர் ஸ்ரீமான் காசிநாதர் உபாத்தியாயர் அவர்கள். அவர்களின் இளைய புத்திரனான திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களின் சமூக சேவையைப் பாராட்டியும், அகவை அறுபது பூர்த்தி குறித்தும் தென்மராட்சி அன்பர்கள் விழா எடுப்பது குறித்து அகமகிழ்கிறேன். துர்க்கா தேவியின் திருவருளால் சிவஞானசுந்தரம் குடும்பம் சகல செல்வங்களுடனும் நிறைவாக வாழ இதய பூர்வமாக வாழ்த்துகிறேன். அன்னதான பணிகளிலும் ஆலயப் பணிகளிலும் பாடசாலைப் பணிகளிலும் சேவை செய்து பாராட்டுப் பெறும் விழாநாயகர் தன்பணி தொடர நல்லாசியும் வாழ்த்தும் கூறி அமைகிறேன்.

'என்றும் இன்பம் பெறுக'

கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

*கலாநிதி ஆறு. திருமுருகன்*
*தலைவர்*



# பிரார்த்தனை உரை

**சிவபஞ்சாட்சரம்**
**தர்மகர்த்தா**
**பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில்**
**மட்டுவில்.**

அகவை அறுபது காணும் திரு. கா. சிவஞானசுந்தரம் சிறுவயது தொடக்கம் பழகும் எமது இனிய குடும்ப நண்பர் ஆவார். மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஆரம்பகாலத்திலிருந்து தற்போது வரை முழுமனதுடன் செயற்பட்டுக் கொண்டிருப்பவர். இம் மன்றத்தினூடாக எமது பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வருடாந்த பங்குனித்திங்கள் உற்சவகாலத்தில் தன்னால் இயன்ற பணிகளைத் திறம்பட ஆற்றிக் கொண்டிருப்பவர். தற்போது தென்மராட்சியில் இடம்பெறும் சமய, கலாசார விழாக்களிலும் தன்னால் இயன்றளவுக்கு முன்னின்று செயற்படுபவர். அனைவருடனும் ஒத்திசைவாகப் பழகி சமூகசெயற்பாடுகளில் அக்கறையுடன் செயற்பட்டு அதன்மூலம் மகிழ்வடைபவர். தற்போது மட்டுவிலில் வசிக்காவிட்டாலும் இங்கு நடைபெறும் சமய, கலை, கலாசார விழாக்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர். இவர் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாசாலையினுடைய ஸ்தாபக பரம்பரையினரைச் சேர்ந்தவர். மேலும் அண்மையில் சிலவருடங்களுக்கு முன்பு தனது காணியில் ஒருபகுதியினை பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்து அதன் வளர்ச்சிக்கு உதவியுள்ளார். இவ்வாறான பொது நலப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சிவஞானசுந்தரம் அவர்களுக்கு அம்பாளின் அருள் குறைவிலாது என்றும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

වී. එස්. රාධාක්‍රිෂ්ණන් (පා.ම)
வி.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ.)
V. S. Radhakrishnan (M.P)
අධ්‍යාපන රාජ්‍ය අමාත්‍ය
கல்வி இராஜாங்க அமைச்சர்
State Minister of Education

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය / எமது இல. / My No. | MOE/SM/2016/LP/215 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | | දිනය / திகதி / Date | 2016.10.26 |

கல்வி இராஜாங்க அமைச்சர்

## மாண்புமிகு வே. இராதாகிருஸ்ணன் (பா.உ) அவர்களின்

# மணிவிழா வாழ்த்து

திரு. திருமதி காசிநாதர் சிவகாமசுந்தரி அவர்களின் புதல்வன் திருவாளர் சிவஞானசுந்தரம் அவர்கள் 2016 இல் 60 ஆம் ஆண்டில் தடம் பதித்தமைக்காக மணிவிழாச் செய்தி வழங்குவதில் உவகையடைகின்றேன்.

ஒரு மனிதனது விருத்தி தன்னை மட்டும் சார்ந்தாக அமையாது அதையும் தாண்டி தன்னையும் தனது குடும்பம் உட்பட முழு சமூகத்திற்கும் மாறுதலை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவ்வகையில் இவரது கல்வி மற்றும் சேவை அதற்கு சான்றாக அமைகிறது.

இவரது உழைப்பின் உயர் பணியில் ஒரு படியாய் மிளிரும் இவ்விழா 60 வருட வளர்ச்சியின் பயனாக இன்னும் பல்லாண்டுகள் சிறந்த சேவையை இச்சமூகத்திற்கு செய்து மென்மேலும் உயர வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

இந்த மணிவிழா நிகழ்வை சிறப்பாக நடாத்தும் அனைவருக்கும் வாழ்த்துவதோடு மணிமகுடம் சூடி நிற்கும் எம் திருவாளர் சிவஞானசுந்தரம் அவர்களுக்கு ஆல் போல் தழைத்து அரசு போல் வேரூன்றி உலகம் உள்ளவரை நீடுழி வாழ வாழ்த்துகிறேன்.

வி.எஸ்.இராதாகிருஷ்ணன் பா.உ.
இராஜாங்க கல்வி அமைச்சர்

V. S. RADHAKRISHNAN M.P.(JP.U.M)
State Minister of Education
State Ministry of Education
4th Floor,
"Isurupaya", Battaramulla

Ministry of Education, 4th floor,"Isurupaya" Battaramulla, Colombo, Sri Lanka.
රාජ්‍ය අමාත්‍ය / இராஜாங்க அமைச்சர் / State Minister } +94 11 2 784 836 (Ext. 1414)
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } +94 11-2 784 185
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail } vsradhakrishnan@gmail.com



# வாழ்த்துச் செய்தி

**சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசட்ணம்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர்

தென்மராட்சியில் வாழும் சமூகத்தொண்டர் திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களுக்குத் தென்மராட்சிச் சமூகத்தினர் சேர்ந்து மணிவிழா எடுப்பதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

**"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்"**

என்ற வள்ளுவர் வாக்குக்குப் பொருந்துமாற்போல் சமூகப்பணிகளை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் இவரிடம் ஒப்படைக்கப்படுவது அவர் சார்ந்த மண்ணின் வழமையாகக் காணப்படுகின்றது.

தென்மராட்சி மண்சார்ந்த அபிவிருத்திப் பணிகளில் இவர் தன்னை நேரடியாகவும் முழுமையாகவும் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். சாவகச்சேரியில் பிரபல அச்சகம் ஒன்றின் முகாமையாளராகப் பணிசெய்தாலும் தனது நேரத்தில் கணிசமான பகுதியைச் சமூகப் பணிகளுக்காகவும் செலவிட்டு வருகின்றார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் அபிவிருத்திப் பணியில் இவரது பங்கு சிறப்பான இடத்தில் இருப்பதை அவதானித்திருக்கின்றேன். திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்கள் ஆலயம் சார்ந்த தொண்டுகளிலும் முன்னின்று உழைக்கின்றார். மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில், கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் கோவில், மட்டுவில் இந்து இளைஞர் மன்றம் எனப்பல சமய சமூக அமைப்புக்களில் இவரது பங்கும் பணிகளும் விதந்துரைக்கத்தக்க வகையில் அமைந்திருக்கின்றன.

திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களின் வெற்றிக்குப்பின்னால் அவரது துணைவியாரின் பங்களிப்பே பிரதானமாகக்காணப்படுகின்றது. கணவரின் உயர்ச்சிகளில் தனது உயர்ச்சியைக் கண்டு மகிழும் உள்ளம் படைத்தவராக அவர் மிளிர்கின்றார்.

ஒரு சமூகப்பற்றாளனுக்கு விழா எடுக்கும் சிந்தனை போற்றுதற்குரியது. திரு. கா. சிவஞானம் அவர்களின் விழா சிறப்படையவும் அவர் சகல செல்வயோக மிக்கபெருவாழ்வு காணவும் தென்மராட்சி மண் சார்ந்தவர் என்ற பெருமையுடன் எனது நல்வாழ்த்துக்கள்.



# வாழ்த்துச் செய்தி


**பேராசிரியர் உயர்திரு. தி. வேல்நம்பி**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகமுகாமைத்துவக்
கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியும்
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவரும்

தென்மராட்சியின் சமூகத்தொண்டர் திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்கள் அகவை அறுபதை எய்தி மணிவிழாக் காண்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களை நீண்ட காலமாக நான் அறிவேன். தென்மராட்சியில் சமயம், சமூகம் சார்ந்த பணிகளில் அவரது பிரசன்னம் நிச்சயமாகக் காணப்படும்.

வாழ்வியலில் தனது வேலைகளுக்கு மேலதிகமாக சமூகத்திற்காக அரும்பணியாற்றுகின்றவர்கள் மற்றவர்களால் மதிக்கப்படுகின்றனர். திரு. சிவஞானம் அவர்கள் பெறும் மணிவிழா சார்ந்த கௌரவமும் அத்தகையதே.

இன்றைய வணிக மயப்பட்ட உலகில் சமூகம் சார்ந்து சிந்திப்பவர்களுடைய எண்ணிக்கை அருகிவருகின்றது. இதனால் சமூக உயர்வு குறித்த செயற்பாடுகளுக்கும் வறுமை நிலவுகின்றது. "என்கடன் பணி செய்து கிடப்பதே" என தம்மை முழுமையாகச் சமூகத்திற்கு அர்ப்பணிக்கக்கூடிய தகைமைபெற்றோருடைய எண்ணிக்கை மிகவும் அரிதாகிவிட்டது.

திரு. கா. சிவஞானம் அவர்கள் தனது அச்சக முகாமைப்பணிகளுக்கு மேலதிகமாக சமூகம் சார்ந்த பணிகளிலும் ஈடுபடுவது பாராட்டிற்குரியது. இவரது பணிகளில் எல்லாம் உடனிருந்து உதவும் திருமதி சிவஞானம் அவர்களது சேவை உயர்வானது. இச்சந்தர்ப்பத்தில் அவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மணிவிழாச் சிறக்கவும் திரு. கா. சிவஞானம் அவர்களது சேவையால் தென்மராட்சிப் பிரதேசம் பெருமையுறவும் எனது நல்வாழ்த்துக்கள்.



# பிரதேசப் பற்றுமிக்க பெருந்தகை

**க. கனகேஸ்வரன்**
பிரதேச செயலர்,
வடமராட்சி கிழக்கு.

இனப்பற்று, மொழிப்பற்று, மதப்பற்று, பிரதேசப்பற்று மிக்க பெருந்தகை – திருக்கணித பதிப்பக முகாமையாளர் உயர்திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களுக்கு எடுக்கப்படும் மணிவிழா சிறக்க – என் வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பிரதேசம் சார்ந்த பெரியவர்களையும், அறிஞர்களையும், கலைஞர்களையும் – அவர்கள் வாழும் காலத்திலேயே வாழ்த்திக் கௌரவிக்க – விழாக்கள் பல எடுத்து தன் – பெருந்தன்மையை வெளிக்காட்டி நிற்கும் பேராளர் அவர்.

**"உள்ளத்தாற் பொய்யாதொழுகின் - உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்"** என்ற வள்ளுவ வாக்குக்கு ஏற்ப வாழ்ந்து – எம்மவரின் உள்ளங்களில் நிறைந்த திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களுக்கு – விழாவெடுப்பதானது எமக்கு எடுக்கப்படும் விழாவை நிகர்த்த பெருமையையும், மகிழ்ச்சியையும் தருகிறது.

ஆலயப்பணிகள், அறப்பணிகள், கல்விப்பணிகள், சமூகப்பணிகள் என வியாபித்த பணிகளின் நாயகராகிய திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்கள் – தன் இல்லத்தலைவி, மக்கள், மருகர், பேரர்கள் சூழ – வேண்டிய யாவும் கொண்டு நீடுழி காலம் வாழவேண்டும். அவரது பணிகள் மென்மேலும் தொடரவேண்டும் என இறையாசி வேண்டி – வாழ்த்தி மகிழ்கின்றேன்.

வாழ்க வளமுடன்! – வளர்க நற்பணிகள்!!!

நன்றி



# செயல் வீரர் சிவஞானம்

"ஆன்மீக அன்னை", "கலாநிதி"
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சகோதரி
**செல்வி கனகம்மா அப்பாக்குட்டி**
ஓய்வுநிலை ஆசிரியர்

மணிவிழாக்கொண்டாடும் காசிநாதர் சிவஞானசுந்தரம் அவர்கள் ஒருசெயல் வீரர். எங்களது குடும்ப நண்பராக விளங்குபவர். இவருடைய பெரிய தந்தையார் அமரர் கந்தர் வல்லிபுரம் ஆசிரியருடன் ஏற்பட்ட நட்பு பின்பு அமரர் கந்தர் காசிநாதர் ஆசிரியர் சைவத்திரு. காசிநாதர் சிவபாலன் ஆகியோரால் மேலும் வளர்ந்து சென்றது. அந்த வரிசையில் இன்றும் அன்பாக எம்மோடு பழகுவர் சிவஞானம் அவர்கள். பொதுப்பணி ஆற்றுவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். காலமறிந்து சேவை செய்வதில் இவருக்கு நிகர் எவருமில்லை. யுத்த சூழ்நிலையால் துர்க்காபுரம் மகளிர் இல்லம் தென்மராட்சி நோக்கி இடம்பெயர்ந்த பொழுது தேவையான உதவிகளை உடனுக்குடன் செய்த பெருமை சிவஞானம் அவர்களைச் சாரும். எனது சகோதரி ஆன்மீக அன்னை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நம்பிக்கைக்கும் நன்மதிப்பிற்கும் உரியவர்.

வலிகாமம் பிரதேசத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தொண்டராகவும் தெல்லிப்பழை இந்து இளைஞர்சங்க உறுப்பினராகவும் இருந்து பல பணிகள் ஆற்றிய பெருமை இவரைச்சாரும். இன்று மணிவிழாக்காணும் திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்கள் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து இந்த மண்ணிற்கு பல சேவை புரியவேண்டும் என்றும் நீடுழிகாலம் வாழ வேண்டுமென்றும் எல்லாம் வல்ல ஸ்ரீதுர்க்காதேவி அருள்புரிய வேண்டுமென்று அம்பாளை வேண்டுகின்றேன்.



# உயர்ந்த உள்ளம்

**திருமதி அ. வேதநாயகம்**
ஓய்வுநிலை வலயக் கல்விப்பணிப்பாளர்

சாவகச்சேரி மட்டுவில் திருக்கணித பதிப்பக முகாமையாளர் திரு. கா. சிவஞான சுந்தரம் அவர்கள் இப்பூவுலகில் அறுபது அகவை கண்டு மகிழ்ந்திருக்கும் இவ்வேளையிலே அவரது மணிவிழாவை முன்னிட்டு வெளிவரும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் நானும் எனது குடும்பத்தினரும் பெருமையடைகின்றோம்.

எம்மண்ணில் எங்கெல்லாம் நல்ல செயற்பாடுகள் நடக்கின்றதோ அவற்றையெல்லாம் பார்த்தும் பாராட்டியும் உற்சாகமூட்டும் உயர்ந்த உள்ளம். இவரை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. தென்மராட்சிப் பிரதேசத்தின் மீது ஆழமான பற்றுக்கொண்டு பிரதேச மேம்பாட்டுக்காக உழைத்து மகிழ்கின்றவர். அவர்களுக்கு விழா எடுத்து பாராட்டும் பண்பாளர்களுள் ஒருவராவதையிட்டு மகிழ்வடைகின்றேன். நான் தென்மராட்சிக்கல்வி வலயத்தின் வலயக்கல்விப்பணிப்பாளராக இருந்த காலத்தில் திரு. கா. சிவஞானம் அவர்களும் துணைவியாரும் பல்வேறு வழிகளில் வழங்கிய பங்களிப்புக்களும் உதவிகளும் இன்றும் என்மனதில் நிழலாடுகின்றன. இவ்வகையில் சிவஞானம் குடும்பத்தினரின் அன்பை என்னால் மறக்கமுடியாது நாமும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் போல அவர்களால் மதிக்கப்பட்டோம். குறிப்பாக தென்மராட்சி மக்கள் இன்றும் என்மீது விசுவாசமுடையவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் மணிவிழா நாயகனும் அவரது குடும்பத்தினரும் என்றால் மிகையில்லை.

தென்மராட்சி வலயத்தின் முத்தமிழ் விழாவில் ஓய்வுபெற்ற கல்வியாளர்கள், ஆர்வலர்கள், அறிஞர்கள் எனப்பலபேர் பங்குபற்ற வேண்டும் என்ற எனது விருப்பத்திற்குச் செயல்வடிவம் கொடுத்தவர் சிவஞானம். வலயமட்டத்திலான விளையாட்டுப்போட்டிகள் பரிசளிப்பு விழாக்கள் என அத்தனை பெருவிழாக்களிலும் உரிமையோடு பக்க பலமாக நின்றவர். பெருஞ்செலவின்றி வலயமட்டச் செய்திமடல் ‘சிறகு’ வெளிவர உதவியவர். அத்தனை நிகழ்ச்சிகளும் எனது கண்முன்னே இப்பொழுதும் நிழலாடுகின்றன.


எல்லாவற்றுக்கும் மேலாக 2006 ஆம் ஆண்டு தென்மாராட்சியில் இடப்பெயர்வு, ஊரடங்குச் சட்டம், மாணவர் பகிஷ்கரிப்பு, போக்குவரத்துப் பிரச்சினை என்பவற்றால் பாடசாலைகள் இயக்கமுடியாத நிலை இருந்தகாலத்தில் தென்மராட்சிப்பிரதேச மாணவர்கள் வீடுகளில் படிக்காது விளையாடித்திரிந்தனர். அந்தநேரத்தில் புவியியல் அமைவிடத்திற்கு ஏற்றவாறு 14 கொத்தணிகளாக வகுக்கப்பட்டு வீடுகளில் இருந்தவாறே பிள்ளைகள் சுயமாகக் கற்பதற்கும் கற்றவற்றைச் சுயமதிப்பீடு செய்வதற்கும் ஏற்றவகையில் வகுப்பு ரீதியாகப் பாடரீதியாகச்சுயகற்றல் கையேடுகள் தயாரிக்கதிட்டமிட்டு

நடைமுறைப்படுத்த முனைந்தபோது தோள்கொடுத்துதவினார். திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்கள் ஊரடங்குச்சட்டம் ஒருபுறம், மின்சாரப்பிரச்சினை அச்சிடும்தாள் தட்டுப்பாடு இந்த நிலையிலும் ஊரெல்லாம்ஓடி அச்சிடும் தாள்கள் தேடி இரவு பகலாய் விழித்திருந்து அத்தனை வகையான சுயகற்றல்கையேடுகளையும் மதிப்பீடுகளையும் அச்சிட்டு தென்மராட்சி மாணவர் கல்வியை நலிவடையாமல் பாதுகாத்த பெருமை இவரையே சாரும்.

இன்னும் சொல்லப் போனால் 2006 ஆம் ஆண்டு முதலாந்தவணைப்பரீட்சை குடாநாட்டிலுள்ள நான்கு வலயங்களிலும் கரும்பலகையில் வினாக்களை எழுதியும் வாயால் சொல்லியும் நடைபெற்ற வேளை தென்மராட்சி வலயத்தில் மட்டும் அச்சடித்த வினாத்தாள்களில் பரீட்சை நடைபெற்றது. அதற்கு உறுதுணையாய் நின்றவர் சிவஞான சுந்தரமும் திருக்கணிதபதிப்பகமும் என்றால் மிகையில்லை. அதுமட்டுமன்றி 2006 ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகள் எமது செயல்திட்டத்தின் வெற்றியை வெளிப்படுத்தி நின்றன. எனில் மறுப்பதற்கில்லை.

இவ்வாறு எனது சேவைக்காலத்தில் தென்மராட்சிப்பிரதேச மேம்பாட்டிற்காக எம்மோடிணைந்து உழைத்த சிவஞானசுந்தரம் அவர்களின் உயர்வான பண்பை பாராட்டி மகிழ்கின்றேன். மேலும் தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுமன்றி தமிழர்களும் இந்துக்களும் வாழ்கின்ற பிரதேசமெங்கும் உங்கள் பணிதொடரவேண்டும். உயர்ந்த உள்ளம் கொண்ட சிவஞானசுந்தரம் அவர்கள் தமது குடும்பத்தாருடன் நலமோடு வாழவாழ்த்தி நிற்கின்றேன்.

“வாழ்க வளமுடன்”



# திரு. கா. சிவஞானம் அவர்களின் மணிவிழா

''இலக்கியச்செம்மல்''
**திரு. நா. நல்லதம்பி**
ஓய்வுபெற்ற அதிபர்,
மட்டுவில் வடக்கு.

திரு. கா. சிவஞானம் அவர்களின் குடும்பமும் எங்கள் (அமரர் வல்லிபுரம் நாகமுத்து) குடும்பமும் உறவினர் போல வாழ்ந்தார்கள்; வாழ்கின்றோம். படிப்பதிலும் கமத்தொழில் செய்வதிலும் ஒன்றாகச்சேர்ந்து கொள்வார்கள். வேலைகளை ஒழுங்காகச் செய்து முடிப்பதிலும் வல்லவர்கள்.

திரு. கா. சிவஞானம் அவர்களும் அந்த வழியிலே பலவேலைகளையும் திறம்பட, திடம்படச்செய்து முடிப்பதில் வல்லவராக விளங்குவதைக்கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

மட்டுவிலில் யா/சந்திரமௌலீச வித்தியாசாலை தோன்றுவதற்கு வித்திட்டவர் திரு. கா. சிவஞானம் அவர்களின் கொள்ளுப் பேரனார் ஆகும். மட்டுவிலில் இப்பாடசாலையை அமைக்க அமெரிக்கமிஷனுக்குத் தமது காணியில் ஒரு பகுதியைக்கொடுத்து உதவினார்கள். அதனால் திரு. கா. சிவஞானம் அவர்களின் தந்தையார் க. காசிநாதர் தாம் ஓய்வுபெறும் வரை இப்பாடசாலையில் படிப்பித்தார் என்பதை அறியலாம்.

அன்று சிறு கட்டிடத்தில் அமைந்திருந்த அப்பாடசாலை இன்று பெரிய விருட்சமாக வளர்ந்து மாடிக்கட்டிடமாக இருக்கின்றதைக் காண்கின்றோம்.

இப்படசாலையில் அமரர் திரு. காசிநாதர் அவர்களிடம் நான் பாலர்வகுப்பில் அகரமுதல் எழுத்தைக்கற்றேன் என்பதில் இன்றும் பெருமை கொள்கிறேன்.

நிற்க, திரு. கா. சிவஞானம் அவர்கள் திருக்கணித பஞ்சாங்க அச்சுக்கூடத்தைப் பொறுப்பேற்று அதனைத்திறம்பட நடாத்தி வருவதை ஊர் அறியும்.

இந்த அச்சுக்கூடத்தில் பணியாளர்கள் பலர் பணிபுரிகின்றார்கள். திரு. கா. சிவஞானத்திற்கு உதவியாக நிர்வாகப்பொறுப்பை இவரது பாரியார் செய்து வருகிறார் என்பதும் போற்றுதற்குரியது.

ஆக, திரு. கா. சிவஞானம் அவர்கள் இச்சேவையை மேலும் பல ஆண்டுகள் திறம்படச்செய்ய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துவதோடு அவரது மணிவிழாவையொட்டி வெளிவரும் இந்த **"மாண்புறு மட்டுவில்"** என்னும் நூல் சிறப்புற வெளிவர ஆசிகூறி அமைகின்றேன் வணக்கம்.



# மணிவிழா வாழ்த்து

''சித்தாந்த ரத்தினம்'', ''சைவப்புலவர்''
**செல்வி கிருபா வீரசிங்கம்**
ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர்

வாழும் காலத்தில் ஒவ்வொரு மனிதரும் செய்யும் சேவைகளும் நற்பணிகளுமே அவர்கட்குச் சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள நன்மதிப்பை வெளிப் படுத்துவன. அந்த வகையில் தென்மராட்சி மக்கள் மனதில் இடம் பிடித்துக்கொண்ட திரு. கா. சிவஞானசுந்தரத்திற்கு மணிவிழா எடுப்பது மகிழ்ச்சிகரமான விடயமாகும்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக விழா நாயகனை நான் அறிவேன். சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நான் அதிபராக பணியாற்றிய காலப்பகுதியில், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினராக, நலன் விரும்பியாக, பெற்றாராக அவர் வழங்கிய ஒத்துழைப்பு, பாடசாலை வளர்ச்சியில் காட்டிய ஆர்வம், கல்வி விருத்திமுயற்சிகளில் எடுத்த அக்கறை, பாடசாலைப்பணிகளில் விருப்புடன் முன்நின்று பணியாற்றிய பாங்கு, கல்லூரியின் 46 வது ஆண்டு மலர் வெளியீட்டுக்காக ஈடுபாட்டுடன் உழைத்த பங்களிப்புக்கள் இவை எல்லாவற்றையும் நானும் பாடசாலைச் சமூகமும் மறக்க முடியாத நிகழ்வுகளாக நினைவு கூருகின்றேன்.

எளிமை, உளத்தூய்மை, நேர்மை, பிறர்நலசேவை, சைவசமயப்பணி, ஆலயப்பணி, சமூகப்பணி எனத்தன்னை அர்ப்பணித்து அயராமுயற்ச்சியுடன் உழைப்பவர்.

"தீதும் நன்றும் பிறர்தரவாரா" என்பதற்கிணங்க நான்கு பெண் பிள்ளைகளைப் பெற்றும் எல்லாப் பெண்பிள்ளைகளையும் நல்ல நிலையில் வாழவைக்க காரணம் சலியாத உழைப்பாளியாக மட்டுமல்ல, பிறரது நிறைவு காணும் நன்மனபாண்மைக்கு, இறைவன் அவருக்கு கொடுத்த அருளாசியாகும். நாகரீகமாக, நயமாகிப்பேசிப் பழகும் பண்பு அவருக்கே உரிய பாணியாகும். விடாமுயற்சி, வேகம், சுறுசுறுப்பு இவற்றைக்கொண்டு சொந்த வாழ்விலும் உயர்ந்து நிற்கும் இவரது சகல செயற்பாடுகளுக்கும் சக்தியாக நின்று உறுதுணை புரிந்து ஊக்குவிப்பவர் இவரது துணைவியார் திருமதி விமலினி என்பதையும் இங்கு நினைவு கூர்ந்து குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

இந்த தம்பதியினரது வாழ்வு அனைவருக்கும் எடுத்துக்காட்டானதும் சமூக சேவையாளர்களை வாழ்த்தி விழா எடுப்பது கூட ஒரு சமுதாயப்பணியே! இது இளந்தலைமுறையினருக்கு வழிகாட்டும் தூண்டு கோலாகும். இவர்களது வாழ்வையும் சேவையையும் கௌரவித்து விழா எடுக்கும் விழாகுழுவினரையும் பங்களிப்பு வழங்கும் நல்உள்ளங்களையும் பாராட்டி விழா சிறப்புற நிகழ வாழ்த்துக்களை கூறுகின்றேன்.

தம்பதிகளின் சமூகப்பணி தொடரவும், குடும்பவாழ்வும் எதிர்காலத் தலை முறையும் தழைத்துச்சிறந்து ஓங்கவும், விழா நாயகர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, பணிபுரியவும் இறைவன் அருளையும் ஆசியையும் வேண்டி நிறைவு செய்கின்றேன்.



# அன்பான சிவஞானம்

**Dr. லயன் சு. சி. அருளானந்தம்**
"வேதவனம்"
சங்கத்தானை, சாவகச்சேரி.

நண்பன் அன்பன் சிவஞானத்தின் அகவை அறுபதை நிறைந்ததால் அவரின் அன்பர்கள் எடுக்கும் மணிவிழாவில் பங்குபற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாளின் பாதரவிந்தங்களை நன்றியுடன் வணங்குகின்றேன்.

யுத்தகாலம் கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்கள், விமானக்குண்டு வீச்சுக்கள் கோவில்கள், பாடசாலைகள் எல்லாம் குண்டுத் தாக்கதலுக்குள்ளாக்கி அழிந்து கொண்டிருக்கின்றன. தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் திருவிழா நேரத்திலும் தாக்குதலில் பலர் காயப்பட்டும், உயிரிழந்தும் துன்புற்று நின்ற சமயம் அங்கு எமது பணியை முடித்து நின்ற வேளை மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய பங்குனித்திங்கள் உற்சவத்திற்கு செல்லுமாறு நடமாடும் மருத்துவக்குழுவினராகிய எமக்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் பணிப்பு விடுத்தது.

நாம், பங்குனித்திங்கள் காலை 8.00 மணிக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு வந்தபோது அறிமுகமில்லாத இளைஞர் ஒருவர் எங்களை வரவேற்று எமக்குரிய கிடுகினால் அமைக்கப்பட்ட அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். தேவையான தளபாடங்கள் மற்றும் தேவைகள், குளிர்பானவசதிகள், உணவு போன்ற உபசரணைகள் நடந்தன. எமக்கு மட்டுமன்றி அங்கு தொண்டர் பணியில் ஈடுபட்டிருக்கின்ற அணைத்துத் தொண்டர்களுக்கும் வழங்கப்பட்டன.

கோவில் காரியாலயப்பொறுப்பு, ஒலிபரப்பு பொறுப்பு, அங்காடிக்கடைகள் ஒழுங்கமைப்பு, போக்குவரத்துவசதிகள் ஏற்பாடு, நடமாடும் அரச பணிமனைகளை இயக்குதல் எனப்பலதரப்பட்ட பணிகளிலும் அந்த இளைஞர் ஈடுபட்டிருந்தார். கோவிலின் விழா ஒழுங்குகளைச் சீரமைப்பவரும் இவராக இருந்தார் என்பதை அறியமுடிந்தது. அன்றைய தர்மகர்த்தா சிவகுரு ஐயாவுக்கு இவர் ஒரு தூணாக விளங்கியமையும் அதற்கு அவரது மனைவி பக்கபலமாகச் செயற்பட்டமையும் பார்க்கும் போது மிக்கமகிழ்ச்சியாக இருந்தது.

இவரின் துடிப்புமிக்க பணியினை திருக்கணித பஞ்சாங்க கணிதர் வேதாகசோதிட பூஷணம் சிவஸ்ரீ. சி. சிதம்பரநாதக்குருக்களுக்கு கலாபூஷணம் விருது கிடைத்தமையை இட்டு அவரைக் கௌரவிக்க எடுக்கப்பட்ட விழாவின்போது முன்னின்று உழைத்தமையை கொண்டு அறியலாம். தனது முதலாளி என்பதால் முன்னின்று உழைக்கிறார் என்று எல்லோரும் பேசிக்கொண்டனர். அதனைப் பொய்யாக்கிவிட்டது அவர் டாக்டர் அம்பிகைபாகன், உபவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம், ஓய்வு

நிலைக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், ஓய்வுநிலை அதிபர் அருந்தவபாலன் ஆகியோருக்கு எடுத்த கௌரவிப்பு விழாக்கள்.

யுத்தகாலத்திலும் உயிரைச் துச்சமென நினைத்து மக்கள்பணியாற்றிய இவர் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவன். பாடசாலை அபிவிருத்தியில் கண்ணாயிருந்து செயற்படுபவர். இன்று அதிபராகப் பணிபுரிகின்ற திரு. ந. சர்வேஸ்வரன் அவர்களை கல்லூரியின் முதல்வராக பெறுவதற்கு அயராதுழைத்தவர். இவரை எம்மத்தியில் வைத்திருக்கக் கிடைத்தமை நாம் செய்த பூர்வபுண்ணியம் என்றால் மிகையில்லை.

எவர் எவர் சமூகத்திற்கு உதவமுற்படுகின்றார்களோ அவர்களுக்கு தன்னாலான சகல உதவிகளையும் வழங்க முன்னிப்பவர்.

ஒருமுறை பங்குனித்திங்கள் உற்சவம் தொடங்க இருக்கிறது. வலிகாமத்தையும் தென்மராட்சியையும் இணைக்கும் வண்ணாத்திபாலம் உடைந்து கிடக்கின்றது. எப்படியாவது இ.போ.ச. 775 இலக்க பேரூந்தினை இப்பாதையால் பயனிக்க விடவேண்டும் என்று எண்ணிய சிவஞானம் அவர்கள் கிராம மக்களுக்கு அதுபற்றிய விழிப்புணர்வைக் ஏற்படுத்தி அரசதுறை சார்ந்தவர்கள் மூலம் வீதியை ஓரளவு சீர்செய்து பேரூந்தைப்பயணிக்க வைத்தவர்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் மட்டுமன்றி தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில், மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம் என்பவற்றோடு மிக்க ஈடுபாடு கொண்டுழைத்தவர். அவரது தமையனார் சிவபாலன் தங்கம்மா அப்பாக்குட்டிஅம்மாவின் வலது கரமாகத்திகழ்ந்தவர். அதனால் அங்கே இவருக்கும் பெரும் மதிப்பிருந்தது. இவ்வாறாக பல்வேறு பட்ட துறைகளிலும் சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்தவர் என்பதில் மிகையில்லை.

இன்று அவர்மேலும் சிறப்பாக தந்தையார் போல் ஆயிரம் பிறை கண்டு வாழ இறைவனை வேண்டிப்பிரார்த்திக்கின்றேன்.



# தென்மராட்சி சமூகத்தின் நண்பன்

**அ. கயிலாயபிள்ளை**
ஓய்வுநிலை அதிபர்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி


சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வகுப்பு நண்பனான திரு. சிவஞானசுந்தரம் அவர்களின் நட்பு 50 ஆண்டுகளை எட்டியுள்ளமை வியப்பாக உள்ளது. அவரது மணிவிழாவுக்காக வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அவர் கல்லூரிக் காலத்து மாணவ வாழ்க்கையைப்போன்று துடிப்புடன் இன்றுவரை தனது செயற்பாடுகளில் பல்துறைகளிலே பிரகாசிப்பதைக்கண்டு பெருமை கொள்கின்றேன். சிவஞானசுந்தரம் ஓர் சமூக நண்பன்.

கல்வித்துறைச்சார்ந்த விடயங்களிலும் ஆலயம் சார் நிகழ்வுகளை நடாத்து வதிலும் சமூகம் சார்ந்த விடயங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வதிலும் பெரியோர்களை நண்பர்களை மதிப்பளித்து கௌரவிப்பதிலும் அச்சுத்துறை சார்ந்த நுட்பங்களை வெளிப்படுத்துவதிலும் இவர் வல்லவராக விளங்குகின்றார். இவர் பல்துறைசார் அனுபவமுள்ளவராகவும் சமூகத்தின் கனவான்களின் அன்புக்குரியவராகவும் எடுக்கும் கருமத்தை திறம்பட நடாத்துவதில் திறமையுடையவராகவும் திகழ்கின்றார். தென்மராட்சி பிரதேசத்தில் எந்த ஓர் சமூகத்துடன் தொடர்புள்ள நிகழ்வு நடந்தாலும் அதன் பின்புலத்தில் நண்பர் சிவஞானம் இருப்பார்.

நான் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய காலத்தில் இரு முறை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளராக இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு பெற்றோர் சார்பாக பெரும்பங்காற்றியுள்ளார். பழைய மாணவர்சங்கத்திலும் அவரது ஈடுபாடு முக்கியமானதாகும். கல்லூரியின் தேவையை அடையக்கூடிய மதியாலோசனைகளை வழங்குவதில் வல்லவர்.

தென்மராட்சியில் கௌரவிக்கப்பட வேண்டிய பல பெரியோர்களை கனம் பண்ணுவதற்கான விழாக்களை ஒழுங்கமைப்பதில் வல்லவராக இருந்து வருகின்றார். கலாநிதி பஞ்சாபிகேசன், கவிஞர் முருகையன், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரத்தினம் போன்றவர்களுக்கான விழாக்கள் இவற்றுள் சில.

திருக்கணித அச்சகத்தை நிர்வகித்து அந்நிறுவனத்தின் சோதிடப்பணியை மேலோங்கச் செய்வதில் அமரர் சிதம்பரநாதக்குருக்களின் குடும்பத்தினருக்கு இவர் பெருந்துணை புரிந்து வருகின்றார். தென்மராட்சியின் சிறந்த அச்சுக்கூடமாக தனது நிறுவனத்தின் தகைமையை மேலோங்கச் செய்து வருகின்றார். இவரது முயற்சிக்கு திருமதி சிவஞானசுந்தரமும் அவர்களது பிள்ளைகளும் துணைபுரிந்து வருவது பாராட்டுக்குரியது. இத்தகைய சமூகம்சார் பணிகளைச் செய்து வருகின்ற நண்பர் சிவஞானசுந்தரம் தம்பதிகளை இம்மணிவிழா காலத்தில் பாராட்டி வாழ்த்துவதுடன் இன்னும் பல ஆண்டுகள் நல்லாரோக்கியத்துடனும் செல்வத்துடனும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



# ஊரறிந்த உயர்வாளர் திருக்கணிதம் சிவஞானம்

**திரு. க. அருந்தவபாலன்**
ஓய்வுநிலை அதிபர்
யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

பள்ளிப் பருவத்திலிருந்தே என்னுடன் நட்புரிமையுடன் இணைந்திருக்கும் நண்பன் காசிநாதர் சிவஞானசுந்தரத்தின் அகவை அறுபது நிறைவினைச் சுட்டும் மணிவிழா மலரில் எனது வாழ்த்தையும் பதிவு செய்வதில் பெருமகிழ்வடைகிறேன்.

1970 களின் இறுதியில் இந்துக்கல்லூரியில் எம்முடன் இணைந்து கல்வி கற்ற பள்ளித்தோழன் இவன். ஒருவனது படிப்பும் பதவியும் தனியே அவனது திறமையினால் நிர்ணயிக்கப்படுபவையல்ல. அதற்கு வசதியும் வாய்ப்புக்களும் துணை நிற்கவேண்டும். நண்பன் சிவஞானம் நல்ல திறமைசாலி. இருந்தும் அவருக்கு அரசபதவி ஒன்று கிடைக்காமை துரதிஷ்டமே. எனினும் அவனது திறமையும் முயற்சியும் அவனை நல்லதொரு தொழிலதிபராக மாற்றியுள்ளன. அவற்றுடன் அவனது நல்ல பண்பும் சமூகப்பற்றும் அவனை ஊரறிந்த ஒருமனிதனாக, சமூகத்தலைவனாக உயர்த்தியுள்ளன. 'திருக்கணிதம் சிவஞானம்' என்றால் எல்லோருக்கும் தெரியும் படி ஊரறிந்த ஒருவன்.

சமயம், கல்வி, சமூகம் சார்ந்த நிகழ்வுகள் எங்கும் இவனை நாம் காணமுடியும். அதுவும் பார்வையாளனாக இல்லாமல் பங்காளனாக எமது பிரதேசத்தின் பொது நிகழ்வுகள் எல்லாவற்றிலும் இவனது பங்கு ஏதோவொருவகையில் பதிவு செய்யப்பட்டிருக்கும். நல்ல பல நிகழ்வுகளின் தொடக்கப்புள்ளியாக, கால்கோள் இட்டவனாக இவனே இருந்திருக்கிறான். இவைகளுக்காக தனது நேரத்தையும், பொருளையும் வழங்குவதற்கும் பின்நிற்பவனல்லன்.

நல்லதொரு சமயப்பற்றாளன், சமயமுறைப்படி வாழவிரும்புபவன். எமது இளஞ்சந்ததியை சமயத்தினூடாக நல்வழிப்படுத்த முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன். அதற்காகப் பல சமய நிகழ்வுகளை கோயில்களிலும், நிறுவனங்களிலும் நடத்துவதற்கு உந்துசக்தியாக இருப்பவன்.

வேறுபட்ட தொழில்துறையில் இருந்தாலும் பிரதேசத்தின் கல்விச் சமூகத்துடன் நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருப்பவன். கல்விக்கு உதவுவதுடன், பிரச்சினைகளைச் சுமூகமாகத் தீர்ப்பதற்குப் பாடுபட்டதை பல சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடிந்தது. அதிபர் ஆசிரியர்களுடன் நல்லுறவைப் பேணிவருவதுடன் அவர்களுக்கு உயர்ந்த மதிப்பை எப்போதும் அளித்து வருபவன்.

இப்படியான ஒருவனுக்கு இனப்பற்று இயல்பாகவே அமைந்திருக்கும் என்பதைச் சொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. ஒரு காலத்தில் அதற்காக மிகத்தீவிரமாகப் பாடுபட்டவன். அதனால் பல துன்பங்களுக்கும் ஆளானவன் என்பது என்போன்ற சிலருக்குதெரியும். அவனது நல்ல மனதுக்கு நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள், நல்வாழ்வு அமையப்பெற்றது ஆச்சரியமானதல்ல. அது இறைவன் கொடுத்த வரம்.

இவன் வாழ்வின் நலம் தொடர வாழ்த்துக்கள்.
இவன் சமூகப்பணிகள் தொடர வாஞ்சைகள்.



# வாழ்த்துச் செய்தி

கு. கதிர்காமசேகரர்
ஓய்வு நிலை அதிபர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவப்பெருந்தகையின் வாக்கிற்கமைய வாழ்ந்து கொண்டிருக்கின்ற **கா. சிவஞானசுந்தரம்** அவர்களது மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்கக்கிடைத்த வாய்ப்பையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தற்போது வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டுள்ளவர்களான சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களினதும் கலாபூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்களினதும் வழிகாட்டலின்கீழ் அவர் ஆரம்பித்த ஆலயத்தொண்டு விரிவடைந்து அபிவிருத்திச் செயற்பாடுகள் மூலம் மகிழ்ச்சியடையும் ஒருவராகத் திகழ்கின்றார்.

ஆலயங்களுக்கு அடுத்ததாக மனிதப்பிறவிகளை நன்மக்களாக அறிவுள்ளவராக ஆக்கவல்லது வித்தியாலயங்கள். மணிவிழாநாயகர் ஆலயச் செயற்பாடுகளுடன் நிற்காமல் வித்தியாலயங்களின் அபிவிருத்திக்காக அரும்பாடுபட்டு உழைக்கும் ஒருவர். தென்மராட்சியின் சிறந்த ஆரம்பப் பாடசாலையான யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம், ஒரேயொரு பாடசாலையான யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி, தேசிய பாடசாலையான யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியவற்றில் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளராக திகழ்ந்ததுடன் யா/மட்டுவில் சந்திரஜெளீச வித்தியாலத்தின் அபிவிருத்திக்கும் பாடுபட்டமை எனது கூற்றுக்கு எடுத்துக் காட்டாகும். எனது காலத்தில் யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்தாவிற்கு கிடைத்த புகழ் பாராட்டுக்களுக்கு இவரது உழைப்பையே முன்னிலைப்படுத்த வேண்டும். இதற்கு நானே சாட்சியாவேன்.

ஆலயம், வித்தியாலயம் ஆகியவற்றின் செயற்பாடுகளுடன் நிற்காமல் சமூகச்செயற்பாடுகளில் அதிக ஈடுபாடு கொண்டவர் என்பது யாம் அறிந்த உண்மை. வலிகாமம் இடப்பெயர்வின்போது சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களின் குடும்பம் தொடக்கம் நாற்பதிற்கு மேற்பட்டவர்களை தனது வீட்டில் மட்டும் தங்க இடமளித்த ஒருவர். இன்னும் பலருக்கு இடங்களை தேடிக் கண்டறிந்து கொடுத்து உதவிசெய்தவர். இன்றும் இதனை வலிகாமம் மக்கள் போற்றிப் புகழ்கின்றனர்.

இவரது செயற்பாடுகள் அனைத்தும் இனிவருங்காலங்களிலும் சீரும் சிறப்புமாக இடம்பெற நிறைவான சுகவாழ்வுடன் நீண்ட ஆயுளையும் இவருக்கு கிடைக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

தற்பொழுது நான் இலங்கையில் இல்லாதபோதும் கூட என்னையும் நினைவுகூர்ந்து மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க வாய்ப்பளித்த விழாக்குழுவினருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# தம்பி சிவஞானசுந்தரத்திற்கு மணிவிழா வாழ்த்துமடல் இது.

அருட்சகோதரி
**யதீஸ்வரி**
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

பன்றித்தலையாளின் பக்குவத் தொண்டன்
பண்பில் உயர்ந்தவன் பாசமிகுந்தவன்
நன்றியுடமை நயந்தவன்
சிதம்பர நாதரின் கருணை பெற்றவன்

மன்றுனில் ஆடும் மாதேவன் அருளால்
மாண்புகழ் இன்னும் பற்பல எய்தியே
வென்றி கொள் உயர்வினில் மேவுக!
என்றும் விலைமதிப்பிலா நலமெல்லாம் பெறுக

இளமை நிறைந்த இதயத்தான் - பணிகள்
இயன்றன எல்லாம் புரிபவன்
வழமை பிறங்கும் மட்டுவில் பதியின்
மகவாய் உதித்து மாண்புகள் சேர்த்தவன்

நலங்கொள் இல்லறம் நன்மக்கற் பேறு
நம்பிக்கைக் குரியவன் எனநற் பெயர்பெற்றவன்
உளங்கொள வாழ்பவன் சிவஞானசுந்தரன்
உமை பங்கன் அருளால் ஓங்குக நீடு

திருக்கணித பஞ்சாங்கம்!!!
திருத்தமுற உருவாக
உருக்கமுடன் உழைப்போய்!
உயர்வு பல பெறுவாய்.



# மணிவிழா நாயகனுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்

**ஆறுமுகம் ரவீந்திரன்**
தலைவர்,
வாழ்வகம், சுன்னாகம்.

திரு. காசிநாதர் சிவஞானசுந்தரம் அவர்கள் தன் உயரிய சேவைகளாலும் எல்லோரிடமும் சிரித்துப்பேசும் இனிய சுபாவத்தாலும் எண்ணற்ற உள்ளங்களைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டவர். கடின உழைப்பு, கலகலப்பான சுபாவம், யார்க்கும் எப்போதும் ஓடிச்சென்று உதவும் இனிய பண்பு இவற்றின் மொத்த வடிவந்தான் திரு. சிவஞானம் அவர்கள். இறைவன்கூட சொரூப நிலையிலிருந்து தடத்த நிலைக்கு இறங்கியே எமக்கு அருள்செய்கின்றான். அதுபோல ஒரு சேவையாளன் தனது நிலையிலிருந்து சற்றுக் கீழிறங்கினால் மட்டுமே அவனால் உண்மையான சேவையாற்ற முடியும். இதற்கு திரு. சிவஞானம் அவர்கள் ஒருசிறந்த எடுத்துக்காட்டு. அனைவராலும் "சிவஞானம் அண்ணன்" என்று அழைக்கப்பட்டாலும் சேவையென்று வந்துவிட்டால் அவர் தம்பியாக, ஏன்? தொண்டனாகவே மாறிவிடுவார். திரு. சிவஞானம் அவர்கள் எமது வாழ்வக நிறுவனத்தோடும் மிக நெருக்கமான கேண்மை பூண்டொழுகிவருபவர் என்பதையும் இவ்விடத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன். எங்கள் எல்லோர் மனங்களிலும் நிறைந்திருக்கின்ற மணிவிழா நாயகன் திரு. சிவஞானம் அவர்கள் வைர விழா, அமுத விழா கண்டு அதற்கப்பாலும் இனிது வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.



# மணி விழாக்காணும் நண்பன் செயலாக்கம் மிக்க செயல் வீரன்

**திரு. இ. இரவீந்திரன்**
ஓய்வுநிலை அதிபர்,
யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்.


திருக்கணித பதிப்பகத்தினுள் ஒரு சாதாரண சேவையாளனாக உட்புகுந்த திரு. காசிநாதர் சிவஞானசுந்தரம் அவர்கள் தனது அயராதமுயற்சி அர்ப்பணிப்பான சேவை, நம்பிக்கையான செயற்பாடு, எடுத்த கருமத்தைச் சிறப்பாகச் செய்தல், பணிவு போன்ற நற்பண்புகளின் மூலம் திருக்கணித பதிப்பக உரிமையாளரின் நம்பிக்கைக் குரியவராக பதிப்பக முகாமையாளராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இவர் தனது அச்சக வேலையுடன் நின்றுவிடாது பல்வேறு சமூக சேவைகளிலும் தனது காலைப் பதித்துள்ளார். இதற்கு இவரின் துணைவியாரும் பக்கபலமாக இருந்து வந்தார்.

யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயத்தில் திரு. கு. கதிர்காமசேகரர் அதிபராக இருந்த காலப்பகுதியில் (1991-1995) பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளராக இருந்து பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அதிபருக்குப் பக்கபலமாகச் செயற்பட்டவர். பாடசாலைக்கு அருகில் இருந்த காணிக்கொள்வனவிற்குத் தேவையானநிதியின் ஒருபகுதியை மக்களிடமிருந்து திரட்டி கல்வயல் துர்க்காதேவி மாதர் சிக்கனக்கடனுதவி கூட்டுறவுச்சங்கத்திற்கு வழங்கி காணிக் கொள்வனவில் பெரும் பங்காற்றியவர்.

எனது காலப்பகுதியில் (2002 - 2016) பாடசாலை நிகழ்வுகளுக்கான அச்சுப்பதிப்பு வேலைகளின்போது ஒரு பகுதியை இலவசமாகச் செய்து வழங்கி வந்துள்ளார். எமது நூலகத்தில் உள்ள ஊர்ப்பிரமுகர்களின் படங்களின் அனேக மானவற்றையும் பாடசாலை நிகழ்வுகளின்போது மங்கலவிளக்கேற்றப் பயன்படும் பெரிய குத்துவிளக்கு ஒன்றையும் திரு. திருமதி சிவஞானசுந்தரம் தம்பதியினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இவ்வாறான சமூகப்பணிகள் தொடரவும் குடும்பசமேதரராய் தேகஆரோக்கி யத்துடனும் நல்ல வளத்துடனும் நீண்ட காலம் வாழ இறையருள் பாலிக்க வேண்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"கடமையை செய் பலனை எதிர்பாராதே"



# "மணிவிழா" மணியாக அமையும்

**திரு. யோகேஸ்வரன் ஜெயக்குமார்**
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

எனது அன்புக்குரிய நண்பன் திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களுக்கு மணிவிழா எடுப்பதென்பது பொருத்தமானதொரு நடவடிக்கையாகும். தென்மராட்சி பகுதியென்ன யாழ்குடாநாட்டில் எங்கு ஒரு பொது நிகழ்வென்றாலும் திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களது காத்திரமான பங்களிப்பும் அந்நிகழ்வின் சிறப்புக்கு காரணமாக அமைவது வழமை. திரு. சிவஞானம் அவர்கள் கடந்த காலங்களில் கைதடி முதியோர் இல்லத்திற்கு நல்கிய நற்சேவைகளை கருத்திற்கொண்டு கடந்த சில வாரங்களுக்கு முன் கைதடியில் நிகழ்ந்த முதியோர்வார நிகழ்வில் சிறப்பான முறையில் கௌரவிக்கப்பட்டார். திரு. சிவஞானசுந்தரம் அவர்கள் ஈழத்தில் உள்ள இந்து ஆலயங்கள் தொடர்பான அரிய தகவல்களை அறிந்தவர் ஆவர். உலகின் தலைசிறந்த கணித சுத்தியுடன் வெளிவரும் திருக்கணித பஞ்சாங்கத்தின் ஆக்கத்திற்கு மட்டுவில் திருக்கணித நிலையத்தினருக்கு இவர் மிக மிக உறுதுணையாக இருந்து வருகின்றார். திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்கள் பொருளாதார ரீதியாக நலிவடைந்த மக்களுக்கு உதவுவதிலும், தென்மராட்சி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிலும் மிகவும் ஆர்வத்துடன் உழைத்துவரும் ஒரு துடிப்பான மனிதராகும்.

இம்மணிவிழாவானது திரு. கா. சிவஞானம் அவர்கள் கல்விகற்றதும் அவர் மிகவும் நேசிக்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறுவதும் இவ்விழாவில் அவரின் மிகமிக பிரியத்திற்குரிய அவர் பிறந்த மட்டுவில் கிராமத்தின் சிறப்புக்களை கூறும் "**மாண்புறு மட்டுவில்**" நூல் வெளியிட்டு வைக்கப்படுவதும் இம்மணிவிழா மணியாக அமையுமென கட்டியம் கூறுகின்றது.

விழாசிறப்புறவும், திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களதும் அவர்தம் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எதிர்கால வாழ்வில் நல்லாரோக்கியமும் மகிழ்ச்சியும் நிலவவேண்டுமென எல்லாம் வல்ல விநாயகரை வேண்டி எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.



# இறைபணி நின்றோன் காண்

**திரு. க. க. ஈஸ்வரன்**
செயலாளர்,
மட்டுவில் இந்து இளைஞர் மன்றம்.

தென்மராட்சியில் இயற்கைப்பொலிவும் கத்தரிக்காயால் உலகம் போற்றிய மட்டுவில் பதியில் சமயாசார சீலர் காசிநாதர் வழியில் தோன்றி இறைபணி நின்ற சிவஞானசுந்தரம் அவர்களுக்கு அகவை அறுபது. ஆனால் அவர் இன்றும் மட்டுவில் இந்து இளைஞர்மன்றத்தின் பொருளாளர் என்றால் மிகையில்லை.

சிவஞானசுந்தரம் அவர்களை நான் முதன்முதல் சந்தித்தது பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில்தான். எப்படி எமது நட்பு வளரந்தது என்று சொல்லமுடியாத அளவுக்கு அவரது குடும்ப உறுப்பினர்போல் அவரது நட்பு என்னை மாற்றிவிட்டது. மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பணிகளுக்காக என்னை அழைத்து உறுப்பினராய் ஆயுட்கால உறுப்பினராய் இன்று செயலாளராய் அமைந்திருக்கக்கூடிய பெருமை அண்ணன் சிவஞானத்தைச்சாரும்.

பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்தின் பொங்கல் உற்சவம் தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே அண்ணன் அவர்கள் செயற்படத்தொடங்கி விடுவார். செஞ்சிலுவைச்சங்கம், முதலுதவிச்சங்கம், பொலிசார், சாரணர்கள், கிராம அலுவலர்கள், பிரதேச சபையினர், சுகாதாரத் தொண்டர்கள் என அனைத்துத்தரப்பினர்க்கும் அழைப்பு விடுவிக்கப்படுவதோடு அயலவர்களின் ஒத்துழைப்போடு அவர்களுக்கான உபசரணை ஏற்பாடுகளும் நடக்கும்.

பங்குனித்திங்கள் அன்று அதிகாலை நான்கு மணிக்கு முன்னர் ஆலய முன்றலில் அண்ணனின் திருவுருவம் நிழலாடும். ஆலயத்திற்கு தரிசனம் பெறவரும் பக்தர்கட்கு முதல் தரிசனம் சிவஞானம் அவர்கள் தான். சிரித்த முகமும் இனியபேச்சும் இவரை வழிபட்டால் போதுமே என்ற எண்ணத்தை உருவாக்கும். ஆலயத்தில் ஏதாவது தேவை அல்லது பிரச்சனை என்றால் முதலில் சிவஞானம் என்ற பெயரே உச்சரிக்கப்படும். தனியார் நிர்வகித்தலில் அருள் புரியும் அன்னையின் ஆலயத்தில் சிவஞானம் அண்ணனுக்குத் தனிமதிப்புண்டு. தர்மகர்த்தா சிவகுரு அவர்கள், அவரது மகன் பஞ்சாட்சரம் அவர்கள், அவரது மகன் குகவரதன் அவர்கள் என அனைவரும் சிவஞானம் அண்ணனின் ஆலோசனைக்கு மறுப்பு தெரிவிப்பதில்லை.

பக்தர்களுக்கான தேவைகள் நிறைவேற்றுதல் என்ற பணியோடு சிரமதானப்பணி, அன்னதானப்பணி, சமயசொற்பொழிவு, கதாப்பிரசங்கம், இசைக்கச்சேரி எல்லாம் இவரது ஒழுங்குபடுத்தலில் தளர்வின்றி நடக்கும் அது அவருக்கு தனி அருள்.

பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தோடு மட்டுமன்றி அவரது சமயப்பணி தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானம், கல்வயல் ஆயிலடி வீரகத்தி


விநாயகர் ஆலயம், மட்டுவில் சந்திரபுரம் கல்வம் சிவன் ஆலயம் என இவரது பணிக்கு இவ்வாலயங்கள் காத்திருக்கின்றன. முன்னர் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் கல்வம் சிவன் கோவிலில் இவரது பணி சிறப்பாக நடைபெறும். நீண்ட காலமாக பாலாலயத்தில் இருந்த பெருமானை கும்பாபிஷேகம் காணவைத்த பெருமையும் இவரைச் சாரும். கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில்(புலுட்டையன் பிள்ளையார்) வெள்ளிதோறும் மாலை வேளையில் சமயப்பெரியோரை அழைத்து சமயச்சொற் பொழிவுகளை நடத்தி சமய சிந்தனைகளை இளம் சமுதாயத்திற்குக் கற்றுக் கொடுக்கும்பணியை செல்வனே செய்து வருபவர்.

ஆலயப்பணி மட்டுமன்றி பல்வேறு சமூகப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். குறிப்பாக 2000 இல் எமது மக்கள் இடம்பெயர்ந்து வலிகாமத்திலும் வடமராட்சியிலும் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சரியாக கற்றல் வசதிகளின்றித் தத்தளித்தனர். அவ்வேளையில் தாமாக முன்வந்து இலவச கருத்தரங்குகளை ஏற்படுத்தி பொருத்தமான ஆசிரியர் களைக்கொண்டு நடத்திய பெருமையும் இவருக்குண்டு. இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் பாடக்குறிப்புகள், வினாத்தாள்கள், உபசரணைச் செலவுகளுக்காக வர்த்தகப் பெருமக்களை நாடியபோது அவர்கள் சரியான அனுசரணை வழங்கவில்லை. அதனால் சோர்ந்து விடாத சிவஞானம் அவர்கள் தனது சொந்த நிதியிலும் வலயக்கல்வி அலுவலகத்தின் ஆலோசனையுடன் கருத்தரங்குகளை நடத்தி மாணவர்களைப் பயன்பெறவைத்தவர். உரும்பிராய், மானிப்பாய், நெல்லியடியில் இரண்டு மண்டபத்திலுமாக நான்கு நிலையங்களிலும் சுமார் 700 பிள்ளைகளுக்கு மேல் பங்குகொண்டு பயன் பெற்றனர்.

இப்படியாக அண்ணன் சிவஞானசுந்தரம் அவர்களின் இந்த அறுபது வருட வாழ்வு உண்மையில் வாழ்வின் அர்த்தத்தை வெளிப்படுத்தியது எனில் மிகையில்லை. வாழ்ந்தால் இப்படி வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டிய அன்பனுக்கு எம்மவர் எடுத்த பெருவிழாவில் வெளியடும் **"மாண்புறு மட்டுவில்"** எனும் மலரில் அடியேனின் சிறுசெய்தியும் இடம்பெறுவதை இட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

வாழ்க மணிவிழா நாயகன்.

"இறைபணியே இன்பப்பணி"



# மணிவிழா நாயகற்கு மங்கல அந்தாதி

"தமிழ்க்கவி"
**செ. சுதாகரன்**
மட்டுவில் வடக்கு


சீரோங்கு தென்மராட்சித் திருப்பதியே மேவுகின்ற
பாரோங்கு மட்டுவிலிற் பாலகனாய் வந்துதித்து
ஏரோங்கு கல்வயலூர் எழிற்பதி வாழுகின்ற
சீரோங்கு சிவஞானசுந் தரனார்க்கு அறுபதாமே.

அறுபதாம் வயதினிலும் அச்சகப் பணியினொடு
அறப்பணி பற்பலவும் ஆலயங்கள் தன்னிலவர்
சிறப்பொடு செய்திட்ட சிந்தனைச் சிற்பியவர்
உறுமின்பம் கண்டுமே வாழியவே பல்லாண்டு.

பல்லாண்டாய் மட்டுவிற் பத்தினி யம்மனது
நல்லாலயம் தன்னில் நற்சேவை செய்தவர்
தெல்லிநகர் துர்க்கை திருவாலயம் தன்னிலும்
கல்வத்துச் சிவனுக்கும் கனத்தபணி ஆற்றியவர்.

ஆற்றிடும் பணிகளில் ஆர்வமுடன் செயலாற்றி
ஏற்றிடும் பணிகளை இலகுவில் முடித்திடும்
ஆற்றலும் கொண்டவர் அவனியில் உயர்ந்தவர்
போற்றரிய பணியாற் புவனத்தில் உயர்ந்தவர்.

உயர்ந்தவர் தமக்கிங்கு உயர்விழாக்கள் எடுத்துமே
பயன்தரும் பணிகள்பல பக்குவமாய்ச் செய்தவர்
நயந்தநல் மனையாளும் நன்மழலைச் செல்வங்களும்
உயர்வினைத் தந்திட உயர்கவே சீரோங்க.



# மட்டுவில் மண்ணின் மைந்தன்

**சு. க. சண்முகசுந்தரம்**
மத்தியஸ்தர் சபை உறுப்பினர்
கமநலசேவை நிலையத்தலைவர்
சாவகச்சேரி.

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமாக அமைந்துள்ள தம்பி சிவஞானத்திற்கு அவர்களுடைய நண்பர்களான பெருந்தகைகள் மணிவிழா எடுப்பதனையிட்டு பேருவகையடைகின்றேன்.

தம்பி சிவஞானம் அவர்கள் தன்னலம் கருதாத மேலோன். இவன் எமது உறவினர்கள் அனைவரிலும் பேரன்பு மிக்கவன். எமது உறவினர்களின் இல்லற நிகழ்வுகள் எதுவாக இருந்தாலும் ஓடோடி வந்து முன்னின்று தன்னுடைய குடும்ப நிகழ்வுகள் போல் தன்னை அர்ப்பணித்து செயற்படுபவன். எந்தெந்த கிரியைகளாயினும் அவை அனைத்தையும் பொறுப்பேற்று ஒழுங்குபடுத்தி சிறந்த முறையில் நடத்தும் இயல்பினன். கலாசார விழுமியங்களை கடைப்பிடிப்பதில் முன்னிற்பவன்.

அதுமட்டுமல்ல அவன் ஒரு வசதி படைத்தவன் அல்ல. நான்கு பெண்பிள்ளைகளின் தந்தை. ஆனால் பெரும் கொடையாளி. இவரது கொப்பாட்டன் கதிரேசர் காசிநாதர் அவர்கள் தனது காணியில் கட்டிடம் அமைத்து யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் உருவாக வித்திட்டவர். வழிவழியாக இராமலிங்கம், பார்வதிப்பிள்ளை, வல்லிபுரம், காசிநாதர் அவர்களும் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்னர் தம்பி சிவஞானமும் காணி வழங்கி பாடசாலையின் அபிவிருத்திக்கு உழைப்பதில் முன்நிற்கின்றார். மேலும் பாடசாலையின் நுழைவாயில் பெயர்வளைவு வீதி அபிவிருத்தியின்போது சில காலம் கழற்றி வைக்கப்பட்டிருந்தது அப்போது மிகவும் வேதனையுடன் உடனடியாக இவ்வேலையை செய்து முடியுங்கள் அதற்குரிய செலவை நான் தருகின்றேன். என்று ஒரு தொகைப்பணத்தை என்னிடம் தந்துள்ளார். அவ்வேலையை அவருடைய பணத்திலேயே செய்து முடிக்கப்பட்டது. இப்பணம் தரும்போது கூட தான் பணம் தந்துதவியதை எவருக்கும் கூறக்கூடாது என்றும் என்னிடம் கேட்டுக்கொண்டார். ஆனால் இவ்விடத்தில் நான் இதை கூறாமல் இருக்கமுடியாது. இப்பாடசாலையின் மின்மேட்டார் களவு போய்விட்டதை முன்னாள் அதிபர் திரு. ந. ஜெயகுமாரன் அவர்கள் சிவஞானத்திடம் கூறினார். உடனே அவர் தன்னுடைய பணத்தில் மின்மோட்டர் ஒன்றை வாங்கி பாடசாலைக்கு அன்பளிப்பாக கொடுத்துள்ளார். இவர் மட்டுவிலில் சந்திர மௌலீசவித்தியாசாலையின் வளர்ச்சியில் அர்ப்பணிப்போடு செயலாற்றி வருவதை நான் கண்ணூடாக பார்க்கின்றேன்.

இப்படியாக இவர் எடுக்கின்ற செயற்பாடுகள் எதுவாக இருந்தாலும் அவை சரியாகவே இருக்கும். அதனால் அவரின் செயற்பாடுகளுக்கு நானும் எவ்வித மறுப்பும் இல்லாமல் அவருடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்கி செயற்படுவேன். இப்பேற்பட்ட எனது தம்பிக்கு எடுக்கின்ற இவ்விழாவானது மட்டுவில் பிரதேசத்திற்கே பெருமையூட்டுவதாக அமைகின்றது. எனவே சிவஞானம் தம்பதியினர் இன்னும் பல ஆண்டுகள் எம் பிரதேசத்திற்கு சேவையாற்ற எல்லாம் வல்ல மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மனை பிரார்த்தித்து அமைகின்றேன்.

வாழ்க! வாழ்க! வளமுடன் வாழ்க!



# பிறர் உயர்வில் மகிழும் பேராளர்

**அ. வாசுதேவா**
**அமைப்பாளர், தென்மராட்சி இலக்கிய அணி**

சிவஞான சுந்தரர்க்கு மணிவிழா – நாம்
சிந்தை கனிந்தெடுக்கும் அணிவிழா
தவமான தவம்செழிக்கும் தயவினர் – இவர்
தக்காரை வாழ்த்திமகிழ் மாண்பினர்!.... (சிவஞான...)

உள்ளத்தில் நல்லஉள்ளம் கொண்டவர் – இவர்
உறவுக்கு கைகொடுத்து மகிழ்பவர்
எள்ளளவும் சோர்வின்றி உழைப்பவர் – இங்கு
எல்லாரும் வாழவென்று வாழ்பவர் (சிவஞான...)


வளர்ந்துவரும் இளசுகளை வளர்ப்பவர் – நலம்
வாழ்ந்தவரை வாழ்த்திமகிழ்இயல்பினர்
அளந்த புகழ் அறிஞர் கலை வல்லவர் – என்று
ஆனவரைக் கௌரவிக்கும் அன்பினர் (சிவஞான...)

தெய்வீக மணங்கமழும் திருவினர் – தெய்வத்
திருப்பணியில் சிந்தைகொண்டு வாழ்பவர்
உய்வடைந்து கல்விகலை வாழவே – அண்ணன்
உற்றபணி ஆற்றியுளம் மகிழ்பவர் (சிவஞான...)

கற்றவர்கள் நெஞ்சமரும் கண்ணியர் – இவர்
கலைஞர்களின் கருத்தமரும் திண்ணியர்
மற்றவர்கள் வாழ்வுகண்டு மகிழ்பவர் – நாட்டில்
மலர்ச்சிக்காய் உழைப்பவரை மதிப்பவர்... (சிவஞான...)

வாழ்க வாழ்க வாழ்க அண்ணன் வாழ்கவே – நல்ல
வல்லமைகள் வளங்கள் கொண்டு வாழ்கவே
சூழ்க மனை மக்கள் செல்வம் சூழ்கவே – அவர்
சுந்தரவாழ் வுற்றுநீடு வாழ்கவே!... (சிவஞான...)

கன்னித் தமிழ்த் தாயருள்தான் சூழ்கவே – வல்ல
கடவுளருள் கதித்தோங்கி வாழ்கவே
உன்னிய நற் பணிகளெலாம் வெல்கவே – எம்
உள்ளமுறை அண்ணன் நீடு வாழ்கவே!... (சிவஞான...)



# "இந்துநேசன்" சிவஞானம் அண்ணை

திரு. ந. சர்வேஸ்வரன்
அதிபர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

தென்மராட்சியின் மட்டுவில் பகுதியில் ஒரு நூற்றாண்டுக்கு முன் தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் நோக்கில் பாடசாலையை ஆரம்பிப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. இம் முயற்சியின் பயனாக மட்டுவிலில் வாழ்ந்த புரவலர் கதிரேசர் காசிநாதர் நிலமும் பொருளும் வழங்கி உதவ புகழ்பூத்த அறிஞர் ம. க. வேற்பிள்ளையை தலைமை ஆசிரியராக கொண்டு சந்திரமௌலீசா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. புரவலர் காசிநாதரின் பரம்பரையில் நான்காவது சந்ததியில் வந்தவரே திரு. காசிநாதர் சிவஞானசுந்தரம். ஆரம்பக்கல்விகற்ற சந்திரமௌலீசாவிற்கும் இடைநிலைக் கல்வி கற்ற சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கும் தொண்டாற்றுவதில் இன்பம்காணும் தொண்டனாக சிவஞானம் அண்ணையை நான் பாரக்கிறேன்.

தனது பிள்ளைகள் கற்ற பாடசாலைகளான கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி என்பவற்றின் செயற்பாடுகளில் உதாரண பெற்றோராக செயற்பட்டு உதவியமையை பாடசாலைஅதிபர்களும் ஆசிரியர்களும் நினைவு கூர்ந்ததை நான் அறிவேன். தமது சொத்துக்களை பாடசாலைகளுக்கு நன்கொடையாக வழங்கும் மனப்பாங்கு எமது மண்ணில் அற்றுவிடவில்லை என நிரூபித்து தனது பூட்டனார் காசிநாதரின் வழியில் செயற்பட்டு சந்திரமௌலீசா வித்தியாலயத்திற்கு பெறுமதி மிக்க தமது பரம்பரைக் காணியை நன்கொடையாக வழங்கினார். பாடசாலைகளின் வளர்சிக்கு பாடுபடும் சமூக சிந்தனை மிக்க சிவஞானம் அவர்களை தென்மராட்சி பாராட்டுவது மிக பொருத்தமானது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் செயலூக்கமுள்ள உறுப்பினராக மூன்று தசாப்த காலமாக பாடசாலையின் அபிவிருத்திக்காக ஆர்வத்துடன் உழைத்து வருகிறார். பாடசாலையின் உயர்ச்சியில் புகழில் வெற்றியில் பங்குகொள்ள பலர் முன்நிற்பார்கள் பாடசாலையின் சவால்களில் சறுக்கல்களில் வீழ்ச்சியில் தோள்கொடுக்கும் மிகச்சிலரில் சிவஞானம் அண்ணை முக்கியமானவர். சிவஞானம் அண்ணை போன்றோரின் துணையுடன் பாடசாலையின் அதிபராக பல சவால்களை மனந்தளராமல் எதிர்கொள்ள முடிந்தது. அமைச்சரில் இருந்து வர்த்தகர் சங்க பிரமுகர் வரை தனக்கிருந்த தொடர்பை தனக்காக பயன்படுத்தாது தான் கற்ற பாடசாலையின் வளர்ச்சிக்காக பயன்படுத்தும் இந்துநேசன் இவர் என்றால் அது மிகையாகாது.

2000 ஆம் ஆண்டு மக்களும் பாடசாலைகளும் தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து அல்லல்பட்டது யாவரும் அறிந்ததே. க.பொ.த சாதாரணதர மாணவர்கள்

பாடக்குறிப்புக்களையும் இழந்து நின்ற போது அவர்களை பரீட்சைக்கு தயார்ப்படுத்த திரு. சிவஞானம் அவர்கள் மேற்கொண்ட முயற்சி பலரும் அறியாதது. ஆர்வலர்கள் பலரை ஒன்று திரட்டி நெல்லியடி, உரும்பிராய், மானிப்பாய் ஆகிய இடங்களில் தென்மராட்சியை சேர்ந்த 700க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக தயாரிக்கப்பட்ட பாடக்குறிப்புக்களுடன் கருத்தரங்கை நடாத்தியமை காலம் கருதி செய்த பெரும் கல்விப்பணியாகும். 2006 ஆம் ஆண்டில் யுத்த சூழல் காரணமாக காகிதாதிகளுக்கான தடை. முதலாவது தவணைப்பரீட்சை வினாப்பத்திரம் தயாரித்து வடக்கில் நடத்த முடியவில்லை. ஆயினும் தென்மராட்சிக் கல்வி வலயம் மட்டும் வினாப்பத்திரம் தயாரித்து முறையாக பரீட்சை நடத்தியது. பரீட்சைக்கான காகிதாதிகளை ஊரெலாம் தேடிப்பெற்று இலவசமாக திருக்கணித பதிப்பகத்தில் அச்சேற்றி வழங்கியவர் திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்கள் என்பதைப் பலரும் அறியார். தென்மராட்சி கல்வி அபிவிருத்தியில் அவரின் ஈடுபாட்டிற்கு இவை சான்றாதாரங்கள்.

என் அறிவுக்கெட்டியபடி பதவி நிலை வான்மையாளர் இல்லாத நிறுவன தலைவர் பதவி வகிக்காத ஒரு சமூக சேவையாளனை பாராட்டி வாழ்த்தி தென்மராட்சியில் எடுக்கப்படும் முதலாவது விழா இதுவாகும். இந்த விழாவே இவரின் சேவைக்கான அங்கீகாரமாகும். திரு. திருமதி காசிநாதர் சிவஞானசுந்தரம் அவர்களும் அவர் குடும்பத் தினரும் சகல வளங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ சாவகச்சேரி இந்து அன்னையின் தாழ்பணிந்து பாடசாலைச் சமூகம் சார்பாக வாழ்த்துகின்றேன்.



# செயலாளரின் உள்ளத்தில் இருந்து....

**கவிஞர் த. நாகேஸ்வரன்**
செயலாளர்,
மணிவிழாக்குழு.

பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் உரிய அண்ணன் உயர்திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களின் மணிவிழாக் குழுவுக்கு – செயலாளராக அமையும் பேறு வாய்க்கப் பெற்றதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன்.

எமது பிரதேச கல்விமான்களையும், கலைஞர்களையும் தன் உயிராக நேசிப்பவர் இவர். அவர்களது பணிகளையும், சேவைகளையும் கௌரவிக்க பல விழாக்களை முன்னின்று செய்த பெருமை அவருக்கு உரியது.

எடுத்த பணியை நிறைவேற்ற–ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்கும் பண்பு அவருக்கே உரிய தனிச் சொத்து.

எங்கள் கல்வியாளர்களும், கலைஞர்களும், நண்பர்களும் இவரது மணிவிழாக்கு வழங்கும் ஆதரவு கண்டு பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது.

போற்றவேண்டியவற்றையும், புகழுக்குரியவர்களையும் போற்றிப் புகழ்ந்து பெருமைப்படும் ஒருவரை போற்றி வாழ்த்துவது எம் பிரதேசத்துக்குக் கிடைத்த பேறாகும்.

மணிவிழாச் சிறப்புற குழு அமைத்தும் ஆலோசனைகள் வழங்கியும் அனைத்து உதவிகளையும் வழங்கிய அன்புள்ளங்களை நன்றியுடன் இங்கு பதிவு செய்கின்றேன்.

அண்ணன் திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்கள் தன் இல்லத்தலைவி, பிள்ளைகள், மருகர், பேரர் சூழ இறையருளாற் பொலிந்து வாழவும் அவரது பணிகள் மென்மேலும் தொடரவும் இறையருளை இறைஞ்சி வாழ்த்தி அமைகின்றேன்.

நன்றி


எம் பிள்ளைகள்

உ

**சிவமயம்**

சாவகச்சேரி மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும்
கல்வயலை வதிவிடமாகவும் கொண்ட
**திருவாளர் காசிநாதர் சிவஞானசுந்தரம் அவர்களுக்கு**
அவரது நண்பர் குழாத்தினால்
**2016.10.30** ந் திகதி எடுக்கப்பெற்ற மணிவிழாவின்போது
அவரது துடிப்பான சமூகசேவையைப் பாராட்டி
"*சமூக ஜோதி*" என்னும் பட்டமளித்துக் கௌரவித்த ஞான்று
வாழ்த்தி வழங்கப்பெற்ற

# *வாழ்த்துப்பாக்கள்*

**வெண்பா**

ஏரோங்கு கல்வயலூர் எழிற்பதி வாழுகின்ற
சீரோங்கு சிவஞான சுந்தரனார் – பாரோங்க
நல்லறங்கள் இயற்றியே நாநிலம் புகழ்ந்திடப்
பல்லாண்டு வாழி பழுத்து.

**வாழ்த்து**

சற்குருவாம் காசிநாதச் சான்றோனின் புதல்வனாய்
சால்புநிறை சிவஞான சுந்தரனார் வாழி
நற்றவர் புகழ்ந்திடும் நல்லதோர் திருக்கணித
நல்லச்சுச் சாலையின் நடாத்துநர் ஆகிப்
பற்றுடன் பணிசெய்து பலசமுகப் பணிகளையும்
பக்குவமாய் நிறைவேற்றும் பண்பாளன் இவனே
எற்றிசையும் புகழ்ந்திட ஏற்றமொடு இல்வாழ்வில்
இருந்தோம்பி வாழியவே இவ்வுலகு போற்ற


சீர்பெருகு தென்மராட்சித் திருப்தியே மேவுகின்ற
சிறந்தோரைக் கௌரவிக்க விழாவெடுத்த செம்மல்
பேர்பெருகு திருக்கணித பதிப்பகத்தை நடாத்துகின்ற
பெரும்பேறு பெற்றுள்ள பேராளன் இவனே
ஏர்பெருகு மட்டுவிலூர் ஏந்தலாய் வந்துதித்து
என்றும் இளமையொடு இருக்கின்ற ஒருவன்
பேர்பெருக எஞ்ஞான்றும் பெரும்பணிகள் செய்துமே
பெருமையுற வாழியவே பேர்புவியிற் பல்லாண்டு

மண்புகழ இந்நாளில் மணிவிழாக் கண்டாய்
மனையறம் பேணியே மாண்புடன் வாழ்ந்தாய்
எண்ணத்தில் எஞ்ஞான்றும் எம்மண் மேன்மையை
இருத்திப் பணிசெய்து ஏற்றமும் கண்டாய்
நண்பர்கள் ஒன்றுகூடி நலமுடன் விழாவெடுத்து
நற்"**சமூகஜோதி**" யென நாமமும் தந்தார்
பண்புநிறை பத்தினியும் பாசநிறை பிள்ளைகளும்
பழுதின்றிக் காத்திடப் பல்லாண்டு வாழியவே.


நலமுடன்
**மணிவிழாக்குழுவினர்.**


ஆக்கம்: "**தமிழ்க்கவி**" செ. சுதாகரன்

## எங்கள் குடும்பம்




Kugan Studio






Wish you very Happy Wedding Anniversary
My dearest Sana & Pranavie
25.10.2016

# சிவ(சேவா)ஞான சுந்தரம்

இந்துசமுத்திரத்தில் இலங்குகின்ற ஈழமணித்திருநாட்டின் வடபுல மாகாணத்தின் தலைமை வகித்திருப்பது யாழ்ப்பாணம்

**“எண்சா ணுடம்புக்குச் சென்னி சிறந்திடும்**
**என்றே யுரைப்ப ரதுபோலப்**
**பொன்சே ரிலங்கைச் சிரமென வேவரும்**
**புண்ணிய மோங்கிடும் யாழ்ப்பாணம்.**

என்று நாவலியூர்ச் சோமசுந்தரப்புலவர் நயந்துரைத்த யாழ்ப்பாணத்தின் கீழ்ப்பால் இயற்கைச் சோலைகளும் பெட்பாரும் பெண்ணைகளும் வாழையொடு மேவிப் பயன்நல்கிட, கழனிகள் விளைந்து செந்நெல்லை உவந்திட, நிலமும் பொழுதும் பெருமையுற கோவில்களும், குளங்களும் நிறைந்ததால் அருளும் அழகும் பொலிந்திருக்க உரைவல்லாளர், பண்டிதமணி, கவிஞர் என் சான்றோர்கள் நிறைந்திலங்கும் “குழைக்காடு” என செல்லமாக அழைக்கப்படும். தென்மராட்சிப் பிரதேசத்தில் தேன்குளம் (மட்டு- தேன், வில்- குளம்) என்ற இனிமையான பெயருடன் விருந்தோம்பும் பண்பும், அறமும் தழைத்தோங்கும் மட்டுவில் பதி தென்மராட்சிக்குத் திலகமாய் திகழும் தலமாகும்.

சீர் நிறைந்த சைவத்தமிழ் பெரியோரை இம்மண்ணுக்குத் தந்த பெருமைபெறும் திருவூராய்த் திகழும் மட்டுவிலில் ஆன்மீகப் பணியுடன் அறிவுப் பணியாற்றிய பெருந்தகை ஸ்ரீமான் கந்தர் காசிநாதர் அவர்கள் ஆயக்காரர் மரபிலே தோன்றியவர். “காசியவாத்தியார்” என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட ஸ்ரீமான் காசிநாதர் அவர்கள் ஆயிரம் பிறைகண்டவர் என்று பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் போற்றுவார். சுமார் தொண்றேழு ஆண்டுகள் வாழ்ந்து கல்விப்பணியாற்றிய ஓய்வுநிலை ஆசிரியர் அவர்களின் வாழ்வியல் இல்லறம் என்பது நல்லறமாகத் திகழ மானா வளையார் என்று அழைக்கப்படும் கல்வயல் கணபதிப்பிள்ளை சிவகாமசுந்தரியைக் கரம்பிடித்து இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணையாய் வாழ்ந்துகாட்டியவர் ஆயத்தடி மட்டுவில் வடக்கு, சாவக்ச்சேரியை முகவரியாகக் கொண்டு வாழ்ந்த காசிநாதர் சிவகாமசுந்தரி தம்பதிகளின் இல்லறப்பேறாக பாலசுப்பிரமணியம், சிவபாலன், சிவகடாட்சம், சிவஞானசுந்தரம் என நான்கு ஆண்பிள்ளைகளும் சறோஜினிதேவி, ஈஸ்வரிதேவி, கிருபாதேவி என மூன்று பெண்பிள்ளைகளும் உதித்தனர்.

நான்கு ஆண்களில் சிவபாலன் நைட்டிகப் பிரமச்சாரியாய் தெல்லிப்பழை துர்க்கா துரந்தரியின் அருளுக்குப் பாத்திரமாகி தெய்வீகத் தொண்டு புரிந்து வருகின்றார் ஏனையோரும் அவரரவர் முயற்சியால் வேளாண்மையிலும் சாரத்தியத்திலும் சிறந்து விளங்குகின்றனர்.

ஆண்களில் கடைக்குட்டியாய் உதித்தவர் தான் இன்று மணிவிழாக்காணும் மக்கள் சேவையே மகேசன் சேவையாய் எண்ணிப் பொதுப்பணிகளில் மனம் நிறைய

வாழ்ந்து வரும் திருவாளர் காசிநாதர் சிவஞானசுந்தரம் அவர்கள் 1956 ஒக்டோபர் 30ந் திகதி துர்முகி வருடம் ஐப்பசி மாதம் 14-ம் நாள் இப்பூவுலகில் உதித்தார். அந்நாள் தென்மராட்சியின் மக்களுக்கு தன்னலமற்ற தொண்டாற்றும் பெருமகனை பெற்றதால் தென்மராட்சியே பூத்துக் குலுங்கியது.

## கல்வி

இருமுது குரவரின் பூரணத்துவமானதும் அன்பும் நிறைந்த அரவணைப்பில் வளர்ந்த சிவஞானசுந்தரம் அவர்கள் தனது ஆரம்பக்கல்விக்காக யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். தரம் 5 வரை மேற்படி வித்தியாலயத்தில் கல்விபயின்ற சிவஞானசுந்தரம் அவர்கள் இடை நிலைக்கல்வியை யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கற்றார். ஜோதிடமணி சி.ஜெகதீஸ்வரசர்மா, ஓய்வுநிலை அதிபர் கப்டன் அ.கைலாயபிள்ளை ஓய்வுநிலை அதிபர் திரு. க. அருந்தவபாலன், திரு. சு.சோய்சோதிகாந்தன் ஓய்வுநிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர் கணித ஆசிரியர் சு. சிவானந்தன் போன்றோருடன் சகபாடியாய் கல்விபயின்றவர்.

## தொழில்

தமையனாரின் வழிப்படுத்தலில் கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளராக தற்காலிக பதவியில் அமர்த்தப்பட்டார். பின் அக்கராயன் சக்கரைத் தொழிற்சாலையில் வேலை செய்தார் பின் மட்டுவில் திருக்கணித நிலையத்தில் 1978 ம் ஆண்டு இணைந்து கொண்டு தனது அச்சகப்பணியை ஆரம்பித்தார். சமகாலத்தில் சுதந்திரன் பத்திரிகையின் பகுதிநேர ஊழியராக இயந்திரப்பகுதியில் சுதந்திரன் பத்திரிகையின் இறுதிக்காலம் வரை வேலை செய்தார். தொடர்ந்து வலம்புரி பத்திரிகை, பாரதிபதிப்பகம் போன்றவற்றிலும் இடப்பெயர்வு காலங்களில் பதிப்புத்துறையில் பணியாற்றினார். இவ்வாறாக பதிப்புத்துறையில் பெற்ற அனுபவப் பேறின் வெளிப்பாடாக 22.03.2003ம் ஆண்டிலிருந்து திருக்கணித பதிப்பகத்தை சாவகச்சேரி டச் வீதியில் நிறுவி அதன் முகாமையாளராக இன்று வரை பணியாற்றி வருகின்றார்.

திருக்கணித அச்சகத்தில் பணியாற்றியதன் பேறாக "வேதாகம சோதிட பூஷணம்" 'கலாபூஷணம்' சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்களின் குடும்பத்துடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பைப் பெற்றதுடன் குருக்கள் அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவராக அவர்களின் குடும்பத்தில் ஒருவராக மதிக்கப்பட்டு வரும் பாக்கியம் பெற்றார்.

## குடும்பம்

ஏழாலையைச் சேர்ந்த சுப்பையா செல்லம்மா தம்பதிகளுக்கு சுகந்தினி (துர்க்காதேவி தேவஸ்தானம்), விமலினி, பாலமோகன், விஸ்ணுமோகன் என நான்கு பிள்ளைகள். ஆண்பிள்ளைகள் இருவரும் யுத்தத்தின்போது மரணித்துவிட்டார்கள். மணிவிழா நாயகன் சிவஞானசுந்தரம் அவர்கள் விமலினியை 11-09-1983 இல்

கரம்பிடித்து நல்லோர் வாழ்ந்த இல்லற தர்மத்தை சிறப்புறத் தொடங்கினார். தம்பதிகள் இருவரும் அன்பால் ஒன்றினைந்தவர்களாய் இல்லறத்தார்க்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வந்த பெருமையால் பிரவீணா, பிரதீபா, பிரபூர்ணா, பிரணவி என்னும் நான்கு பெண்களைச் செல்வங்களாய் பெற்று சீராட்டி வளர்த்து கல்வியூட்டி இன்றும் அவர்களுக்கும் இல்லற தர்மத்தை கற்பித்து இல்லறத்தில் வாழவைத்து மகிழ்ந்திருக்கின்றார்கள். லம்போதரன், யோகானந்தன், சிவசுதன், நந்தகுமார் என்போரை மருகர்களாக இறையருள் காட்ட அவர்களை தம் மக்களுக்கு மணஞ் செய்து மகிழ்ந்தனர். அம்மகிழ்ச்சிக்கு மகிழ்ச்சியூட்டுவதாக ல. லக்ஷனா, யோ. நிகித்தா, யோ. ஹனித்தா, யோ. ஜெய்நந், சி. கேஷஹி என்னும் பேரப்பிள்ளைகளையும் தாலாட்டிச் சீராட்டும் பேறு பெற்றனர்.

## சமூகத்தொண்டுகள்

ஒரு மனிதன் வாழ்ந்தமைக்கான சான்றுகளாக இருப்பவை அவன் வாழ்ந்த வாழ்வியல் தடங்களாகும். உடல் மறைந்தாலும் மக்கள் மனங்களில் மறையாததும் மறக்கமுடியாததுமான பணிகளை புன்னகை பூத்த முகத்துடன் ஆற்றியமையால் சமூக சேவகனாக மட்டுவில் பிரதேச மக்களால் மதிக்கப்படுபவராக சிவஞானசுந்தரம் திகழ்கின்றார். ஆலயவிழாக்களாயினும், பாராட்டுவிழாக்களாயினும், இல்லற அபரக் கிரியைகளாயினும், பாடசாலை நிகழ்ச்சியாயினும், இலக்கிய நிகழ்ச்சியாயினும் அனைத்திலும் சிவஞானம் அவர்களின் பங்கு அளப்பரியதாகும். குறிப்பாக பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவத்தில் சிவஞானம் அவர்களின் பங்குபற்றல் என்பது தனித்துவமானதாகும். குறிப்பாக வேறு எந்த விழாவாயினும் அது குடும்பத்துவிழாவாக இருந்தாலும் பங்குனித்திங்களில் அவரது பிரசன்னம் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்தில் தான் இருக்கும். பொது நிர்வாகம் இல்லாத தனிப்பட்ட நிர்வாகத்திற்குட்பட்ட ஆலயத்தில் எந்தவிதமான பதவி பொறுப்புக்களும் வழங்கப்படாத நிலையிலும் தனது கடமை என நினைந்து பிரதேச உணர்வோடு மக்கள் பணிக்காகத் தன்னை அர்ப்பணிக்கும் பண்பு எல்லோராலும் மதிக்கப்படுவது மட்டுமன்றி அம்பாளின் அருளுக்கும் பாத்திரமானதாகும். மணிவிழாநாயகனின் சமூகப்பணிகளை எழுதுவதாயின் இந்நூல் பலநூறு பக்கங்கள் தேவையாகும் விரிவஞ்சி சுருக்கமாகப் பட்டியலிடுகின்றேன்.

## * பொதுஅமைப்புக்களில் சிவஞானசுந்தரம்

1. மட்டுவில் கிராம அபிவிருத்தி மன்ற நிர்வாகசபை கலை கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர்.

2. மட்டுவில் கண்ணகை சனசமூகநிலையத்தின் முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர், செயலாளர், பொருளாளர்

3. மட்டுவில் கல்வம் வீரகத்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை முன்னாள் செயலாளர்.

4. மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தின் நிர்வாகசபை உறுப்பினர், தலைவர், செயலாளர், பொருளாளர் இன்றுவரை

5. தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க ஆயுட்கால உறுப்பினர்.

6. தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின் செயலாளர்

7. மட்டுவில் மோகனதாஸ் ப.நோ.கூ.சங்க முன்னாள் கிளைக்குழுத் தலைவர்

8. தென்மராட்சி இடம்பெயர்ந்தோர் ஒன்றியத்தின் செயலாளர்

9. "வாழ்வகம்" விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தின் முன்னாள் நிர்வாகசபை உறுப்பினரும் ஆயுட்கால அங்கத்தவரும்

10. தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டப முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்.

11. ஆயிலடி வீரகத்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை நிர்வாகச் செயலாளர்.

12. தென்மராட்சி அறநெறிப்பாடசாலைகள் ஒன்றியப் பொருளாளர்.

13. யா/கல்வயல் சண்முகானந்த வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளர்.

14. யா/ மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய பழைய மாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினர்.

15. யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச்சங்க முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்

16. யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகசபை முன்னாள் செயலாளர்

17. யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினர்.

18. தென்மராட்சிப் பிரதேச கலாச்சாரப் பேரவை நிர்வாகசபை உறுப்பினர்

19. யாழ்ப்பாண அச்சகத்தார் இணைய நிர்வாகசபை உறுப்பினர் (தென்மராட்சி)

20. சாவகச்சேரி புராதன வாரிவனேஸ்வரர் ஆலய மரபுரிமை நிலைய முகாமைத்துவ சபை உப செயலாளர்

*** மணிவிழா நாயகனின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட விழாக்கள்**

1) மட்டுவில் சந்திரபுரம் சாந்தநாயகி சமேத சந்திரமௌலீசப்பெருமான் ஆலய (கல்வம் சிவன் கோயில்) பிரதமகுரு அ. சிவசாமிக்குருக்கள் அவர்களின் உபசாரணை விழா - 1993 செல்லப்பிள்ளையார் ஆலய மண்டபம்

2) இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழா. - 1999 யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்

3) 'கலாபூஷணம்' சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்கள் அவர்களின் கௌரவிப்பு விழா 22.02.2005 யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி (விழாக்குழுத்தலைவர்)

4) கவிஞர் இ.முருகையன் அவர்களின் மறைவு குறித்த அஞ்சலி நிகழ்ச்சி - 2007 யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி (விழாக்குழு செயலாளர்)

5) தைப்பொங்கல் விழா (2008, 2015) கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய (புலுட்டையன் பிள்ளையார்) மண்டபம்

6) கல்வயல் கவிஞர் வே. குமாரசாமி அவர்களின் கௌரவிப்புவிழா - 25.04.2010 தென்மராட்சி கலைமன்றம், கலாசாரமண்டபம், சாவகச்சேரி (குழுஉறுப்பினர்)

7) ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. சின்னத்தம்பி அவர்களின் அஞ்சலி நிகழ்ச்சி யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம் (குழுச்செயலாளர்)

8) பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்களின் மணிவிழா - 12.06.2011 தென்மராட்சி கலைமன்றம், கலாசாரமண்டபம் (குழுச்செயலாளர்)

9) ஓய்வுநிலை வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களின் மணிவிழா 03.06.2011 யாழ். தேசிய கல்வியற்கல்லூரி (குழுச்செயலாளர்)

10) கலாபூஷணம் M.K. பஞ்சாபிகேசன் அவர்களின் கௌரவிப்புவிழா தென்மராட்சிக் கலைமன்றம், கலாசாரமண்டபம், சாவகச்சேரி (குழுஉறுப்பினர்)

11) தமிழாசான் திரு. க. தர்மராஜா ஆசிரியர் அவர்களின் மணிவிழா 15.09.2012 யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி (குழுச்செயலாளர்)

12) வைத்தியர் திரு. ச. அம்பிகைபாகன் அவர்களின் மணிவிழா - 2015 தென்மராட்சிக் கலைமன்றம், கலாசாரமண்டபம் (குழுச்செயலாளர்)

13) ஓய்வுநிலை அதிபர் அ. கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழா - 22-02-2015 யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபம் (செயற்குழு உறுப்பினர்)

14) ஓய்வு நிலை அதிபர் திரு. இ. இரவீந்திரன் அவர்களின் மணிவிழா - 07.02.2016 ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபம் (இதழாசிரியர்)

15) ஓய்வு நிலை அதிபர் திரு. க. அருந்தவபாலன் அவர்களின் மணிவிழா 17.08.2016 தென்மராட்சிக் கலைமன்ற கலாசாரமண்டபம் (குழுச்செயலாளர்)

16) மட்டுவில் நா. நல்லதம்பி அவர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தல். 09-10-2016 யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம் (குழுச்செயலாளர்)

## *ஏனைய பணிகள்*

1. தென்மராட்சியில் இருந்து 2000 இல் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் வடமராட்சியில் வசித்த க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் மற்றும் பரீட்சை முன்னாயத்தக் கருத்தரங்கு நடத்தியமை. (நெல்லியடி, மானிப்பாய், உரும்பிராய்)

2. திரு. வைரமுத்து ஆசிரியர் எழுதிய PRACTISE ENGLISH EVERY DAY Book வெளியீடு 09-11-2008

3. வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் எழுதிய **"திருமணப் பொருத்தம்"** சோதிட நூல் வெளியீடு - 18-12-2011 (கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் மண்டபம்)

## வள்ளலாக மணிவிழா நாயகன்

மணிவிழா நாயகன் திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்கள் எமது பிரதேசத்தின் கல்விக்காகப் பெரிதும் சிந்திப்பவர். மாணவர்களின் அறநெறிக்கல்விவளர்ச்சிக்காக சமய சொற்பொழிவுகள், சமயப்பிரச்சாரங்கள், சமய வெளியீடுகள் பலவற்றுக்கும் ஆதரவழித்து வந்தவர்.

அத்தோடு தமது நிலத்தையும் பாடசாலைக்கென அன்பளிப்புச்செய்த பெருமை இவருக்குண்டு மணிவிழா நாயகனின் தந்தையார் காசிநாதர் அவர்களால் அன்பளிப்பாகவும், குறைந்த தொகைப்பணத்திற்கும் வழங்கப்பட்ட நிலத்திலேயே இன்று மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயம் அமைந்துள்ளது. எனில் மிகையில்லை. அப்பாடசாலைக்கான நிலம் போதாமையால் அண்மையிலும் தமது காணியை பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கிய பெருமை இவருக்குண்டு. அந்தவகையில் ஒரு வள்ளலாகவும் திகழ்கின்றார். மணிவிழா நாயகன் இத்தகையோரின் சிந்தனையாலேயே இன்னும் உலகம் இருக்கிறது எனலாம்.


எந்தவொரு மனிதன் சமூகத்தால் கௌரவிக்கப்பட வேண்டும். என்று முன்மொழியப்படுகின்றானோ அதனை பேரறிஞர்கள், பெரியோர்கள் அனைவரும்

வழிமொழிகின்றனரோ அத்தகைய பேறு பெற்ற மனிதன் மனிதருள் மாணிக்கமாக மதிக்கப்படுகின்றான் என்பது வெளிப்படையாகின்றது. இத்தனைக்கும் பொருத்தமான பண்பு நலன்களுடன் வாழும் மனிதர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டியவர்களாவர். அந்தவகையில் திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களைக் கௌரவிக்க வேண்டும் எனப் பெரியோர்கள் எடுத்தமுடிவு பொருத்தமானதே.

கடந்த 09-10-2016 அன்று மட்டுவில் நா. நல்லதம்பி அவர்களின் கௌரவிப்பு நிகழ்ச்சியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதிஅதிபர் திரு. ச. லலீசன் அவர்கள் மட்டுவில் கிராமத்து வரலாற்றுப் பெருமைகளை சிறப்பாக எடுத்துப் பேசி சிறப்புரை ஆற்றியபோது அவ்வுரையை நூலாக்க வேண்டும் என்று மணிவிழா நாயகன் பலரிடமும் கேட்டுக் கொண்டார். இறைவன் சித்தமும் பன்றித்தலைச்சி அம்பாளின் அருளும் நிறைந்ததால் அவருடைய மணிவிழா நாளன்று மட்டுவில் கிராமத்தின் வரலாற்றுத் தொகுப்பு வெளிவருகின்றது. இது முற்றிலும் கடவுள் செயல் என்றே எண்ணத் தோன்றுகிறது.

திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்களின் இத்தகைய சமூகப்பணிக்கெல்லாம் சுய செலவுகள் உண்மையில் அதிகமானதாகும் என்பது உண்மையாகும். இச் செலவுகளுக்கெல்லாம் மறுப்பின்றி உதவி ஒத்துழைத்த பெருமை அவரது மனையாள் விமலினியையே சாரும். இரண்டு சில்லுகளும் பொருத்தமாக அமைந்ததால் குடும்பம் என்ற வண்டி எவ்விதமான தளர்வு மின்றிப் பயணித்தது. அதுவே விழாநாயகனின் வெற்றிக்கும் புகழுக்கும் ஏணியானது. அந்த வகையில் சமூக சேவகனாய் தென்மராட்சி மக்களின் மனங்களில் வாழும் சிவஞானசுந்தரம் அவர்கள் இன்று மணிவிழாக்கண்டு மகிழ்ந்திருக்கின்றார். நாமும் சமூகத்தில் மக்கள் சேவகனாய் உழைத்த பெருமகனை கௌரவித்து அவர் புகழ்பேசி மகிழ்ந்திருக்கின்றோம். இந்த மகிழ்ச்சி இன்னும் பல்நெடுங்காலம் நிலைக்க வேண்டும் எனவும் விழா நாயகனும் அவர்தம் குடும்பத்தினரும் எல்லா நலன்களும் பெற்றுவாழ பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாளின் பாதக்கமலங்களை வேண்டிப் பணிந்து வாழ்த்துகின்றேன்.

தொகுப்பு:-
**திரு. க. க. ஈஸ்வரன்**
தொழில்வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி
ஆசிரியர் மத்திய நிலையம் - வரணி
தென்மராட்சிக்கல்வி வலயம்



அறநெறிப் பாடசாலை ஒன்றியத்தின் ஆறுமுகநாவலர் குருபூஜை




நீதிபதி பிறேம்சங்கர் அவர்களின்
பிரிவுபசாரத்தின் போது



தென்மராட்சி கல்வி வலய பரத நாட்டிய
இறுவெட்டு வெளியீட்டின் போது







அதிபர் ந.அருந்தவபாலன் அவர்களின்
மணிவிழாவில் நன்றியுரை ஆற்றும் போது



ஆசிரியர் க.தர்மராஜா அவர்களுக்கு
வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவித்த போது







# மாண்புறு மட்டுவில்

"செந்தமிழ்ச்சொல்லருவி"
**ச. லலீசன்**
பிரதி முதல்வர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

தென்மராட்சிப் பிரதேசத்தின் பழம்பெரும்பதிகளுள் ஒன்றாக விளங்குவது மட்டுவில். யாழ்ப்பாண நகருக்குக் கிழக்கே ஏறத்தாழ 16 கிலோ மீற்றர் தொலைவில் இப்பதி அமைந்துள்ளது.

**பெயர்க் காரணம்**

வில் என்ற ஈற்றுப் பெயர் கொண்ட கிராமங்கள் யாழ்ப்பாணத்தில் பல உள. கொக்குவில், கோண்டாவில், மந்துவில், நுணாவில், கெருடாவில் இணுவில், உடுவில் என்பன அவற்றுள் சிலவாகும்.

வில் என்பது நீர் பெறப்படுகின்ற ஒருவகைக் குளத்தைக் குறிக்கும். வளைந்திருக்கக் கூடிய வடிவம் பற்றி இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். முற்காலத்தில் குடியிருப்புக்கள் நீர்நிலைகளை மையப்படுத்தியே அமைந்திருந்தன. மட்டு என்பது எல்லை, கள், வாசனை எனப் பல பொருள்களைக் குறிக்கும் சொல்லாகும். எனவே நீர்ச்சுவை காரணமாக இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். அல்லது தென்மராட்சியையும் வலிகாமத்தையும் பிரிக்கும் எல்லையில் இதன் இட அமைவு இருக்கின்றமையால் எல்லைக்குளம் என்ற பொருள்பட இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். பெருங்குளம், நெனியன்குளம், அம்பலந்துறைக்குளம், நுணாவிற்குளம், மருதங்குளம் முதலிய இடப்பெயர்கள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன.

தேன் மிகுதியாகச் சேகரிக்கப்பட்டமையால் மட்டுவில் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் குறிப்பிடுவர்.

சந்திரபுரம் என்ற பழைமையான பெயர் இக்கிராமத்திற்கு இருந்துள்ளது. மட்டுவில் சிவன் எனப் போற்றப்படும் சந்திரமௌலீசப் பெருமானின் பெயரை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை (1848 - 1930) பாடிய ஈழமண்டல சதக நூலில் மட்டுவில் என்பதை சந்திரபுரம் என்றே குறிக்கிறார்.

மட்டுவில் என்ற பெயர் சோழர் காலக் கல்வெட்டுக்களில் காணப்பட்டிருக்கின்றது. " 12 ஆம் நூற்றாண்டுக்குரிய சோழர் கல்வெட்டுக்களான பல்லவராஜன் பேட்டைக் கல்வெட்டும் திருவாலங்காட்டுக் கல்வெட்டும் சோழர் படைத்தளபதியான இரண்டாம் இராஜாதிராஜ சோழன் இலங்கை மீது படையெடுத்தது பற்றிக் குறிப்பிடுகின்றன.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் இராஜாதிராஜசோழன் தமிழகத்தில் ஆட்சி செய்துகொண்டிருந்தபோது அவனது படைகள் வடஇலங்கை மீது படை யெடுத்து மட்டிவால் என்ற ஊரில் தங்கியிருந்த படைவீரர்களையும் யானைகளையும் சிறைப்பிடித்துத் தமிழகத்திற்குக் கொண்டு சென்றதாக 'திருவாலங்காடு' மற்றும் 'பல்ல வராயன் பேட்டை' கல்வெட்டுக்கள் குறிப்பிடு கின்றன. இவ்வாறு கல்வெட்டுக் களில் மட்டிவால் எனக் குறிப்பிடப்படும் இடத்தை பேராசிரியர் பரணவிதானா மற்றும் பேராசிரியர் நீலகண்டசாஸ்திரி ஆகியோர் தற்போதைய தென்மராட்சியில் உள்ள மட்டுவில் கிராமம் என அடையாளப் படுத்தியுள்ளனர் " என வரலாற்றுப் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் தென் மராட்சியின் தொன்மையும் பெருமையும் பற்றி கலைக்கேசரி (2012 ஏப்பிரல், மே) இதழ்களில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

**தென்மராட்சியின் மிகப்பெரும் பிரதேசம் – மட்டுவில்**

மட்டுவில் என்ற பிரதேசம் யாழ்ப்பாணத்தில் உள்ள கிராமங்களுள் மிகப்பெரும் பிரதேசத்தைத் தழுவிய கிராமம் ஆகும். 30.08 சதுரக் கிலோ மீற்றர் இதன் பரப்பளவாகக் காணப் படுகின்றது.

மட்டுவில் பிரதேசத்தின் வடக்கு எல்லையாக புத்தூர் வீதியும், கிழக்கு எல்லையாகப் பருத்தித்துறை வீதியும், தெற்கு எல்லையாக ஏ9 வீதியும், மேற்கு எல்லையாக வலிகாமம் கிழக்கு கடல்நீர் ஏரியும் அமைந்துள்ளன.

மட்டுவிலின் நிர்வாக அலகு கருதி இப்பிரதேசம் கைதடி நுணாவில் (ஜே/309), தென்மட்டுவில் (ஜே/310), மட்டுவில் நுணாவில் (ஜே/311), மட்டுவில் மத்தி (ஜே/312), மட்டுவில் வடக்கு (ஜே/313), மட்டுவில் கிழக்கு (ஜே/ 314), சந்திரபுரம் (ஜே/315) என ஏழு கிராம சேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுத் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவால் நிர்வகிக்கப்படுகின்றது.

இதில் 12 கிராமங்கள் அடங்கு கின்றன. கைதடி நுணாவில் ஒரு கிராமத்தையும், தென்மட்டுவில் ஒரு கிராமத்தையும், மட்டுவில் நுணாவில் ஒரு கிராமத்தையும், மட்டுவில் மத்தி - மட்டுவில் தெற்கு, சிவன்கோவிலடி, வேரற்கேணி, வேவில் ஆகிய நான்கு கிராமங்களையும், மட்டுவில் வடக்கு ஒரு கிராமத்தையும், மட்டுவில் கிழக்கு - மானாவளை, செட்டியகுறிச்சி, வங் களாவடி என மூன்று கிராமங் களையும் சந்திரபுரம் ஒரு கிராமத்தையும் உள்ள டக்கியுள்ளன.

## பிரதேசப் பரப்பளவும் மக்கள் தொகையும்

| இல | கிராம அலுவலர் பிரிவு இல | கிராம அலுவலர் பிரிவு | கிராமங்களின் எண்ணிக்கை | பிரதேசத்தின் பரப்பளவு சதுர கி.மீ. | குடும்பங்களின் எண்ணிக்கை | அங்கத்தவர்களி ன் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 01 | J/309 | கைதடி நுணாவில் | 01 | 3.84 | 258 | 827 |
| 02 | J/310 | தென்மட்டுவில் | 01 | 3.84 | 168 | 694 |
| 03 | J/311 | மட்டுவில் நுணாவில் | 01 | 3.84 | 310 | 915 |
| 04 | J/312 | மட்டுவில் மத்தி | 04 | 5.12 | 348 | 1097 |
| 05 | J/313 | மட்டுவில் வடக்கு | 01 | 5.12 | 361 | 1236 |
| 06 | J/314 | மட்டுவில் கிழக்கு | 03 | 3.84 | 367 | 1093 |
| 07 | J/315 | சந்திரபுரம் | 01 | 4.48 | 478 | 1904 |

*(மூலம் : தென்பொழில் 01 தென்மராட்சி பிரதேச செயலக மலர் - 2015)*

**மட்டுவிலுக்குப் பெருமை நல்கும் மட்டுவில் கத்தரி**

மட்டுவில் என்றதும் எல்லோரதும் நினைவுக்கு வருவது மட்டுவில் கத்தரிக்காய் தான். யாழ்ப்பாணத்தில் பயிரிடப்படும் கத்தரி இனங்களுள் மட்டுவில் வயிற், திருநெல்வேலி ஊதா என்பன பாரம்பரியக் கத்தரி இனங் களாகும். மட்டுவில் கத்தரியை முட்டிக் கத்தரி எனவும் குறிப்பிடுவர்.

பன்றித்தலைச்சி அம்மன் பொங்கலுக்கு வருகை தரும் வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பிரதேச மக்கள் வெண்பொங்கல் படைத்து அதனை மட்டுவில் கத்தரிக்காய்க் கறியுடன் உண்பதைப் பெரும்பேறாகக் கருதுவர். மட்டுவிலின் தற்போதைய நீர்வளம் சவர்த் தன்மை வாய்ந்ததாக இருந்தாலும் அதில் சமைக்கப்படும் கத்தரிக்கறிக்கு ஒரு சுவை இருக்கின்றது. பங்குனித் திங்கள் உற்சவத்திற்கு வந்தவர்கள் வீடு செல்லும்போது மட்டுவில் கத்தரிக்காயை வாங்கிச் செல்வதோடு சிலர் ஆர்வ மிகுதியால் அதனைச் சமைப்பதற்காக அம்மன் கோவில் கிணற்று நீரை போத்தல்களில் எடுத்தும் செல்வர்.

2000 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தென்மராட்சி இடப்பெயர்வினால் தூய மட்டுவில் கத்தரி இனம் அழிவடைந்து விட்டதாக விவசாய ஆர்வலர்கள் கவலை

தெரிவிக்கின்றனர். கண்ணொறுவை விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தினால் கலப்புப் பிறப்பாக்கல் மூலம் பெறப்பட்ட கத்தரி இனங்களே இன்று சந்தைகளில் காணப்படுகின்றன. மட்டுவிலிலும் பயிரிடப்படுகின்றன.

**விவசாயப் பயிர்ச்செய்கை**

மட்டுவில் மக்களின் பிரதான தொழில் விவசாயம் ஆகும். இருப்பினும் சிறப்பான விவசாயப் பயிர்ச்செய்கைக்கு நீர்வளம் ஒரு சவாலாகவே காணப் படுகின்றது. விவசாய அலுவலகத்தாரின் தரவுகளின் படி 2016 இல் வயற்காணி 132 ஹெக்டேயராகவும் தோட்டக் காணி 25 ஹெக்டேயர் ஆகவும் காணப் படுகின்றது. மீசாலை மற்றும் கைதடி விவசாய அலுவலகங்கள் இப்பிர தேசத்தை ஆளுகை செய்வதால் இத் தகவல் முழுமைபெற்றது என உறுதிப்படுத்த முடியாது.

பயிரிடப்படும் பயிர்கள் அடிப் படையில் நெல் முதலிடத்தைப் பெறு கின்றது. மரக்கறிப் பயிர்கள் என்ற அடிப்படையில் கத்தரி முதலிடத்தைப் பெறுகின்றது. வயற் காணிகளிலும் பெரும்போக நெற் செய்கையின் பின்னர் கத்தரி பயிரிடப் படுகிறது.

வீடு கட்டுவதற்காக விவசாய நிலங்கள் பயன்படுத்தப்படும் நிலை மையால் பயிர்ச்செய்கைக்குரிய இடப் பரப்பளவு குறைந்து கொண்டு செல்கின்றது.

**கைத்தொழில்**

குடிசைக் கைத்தொழில்கள் பல இப் பிரதேசத்தவரால் மேற்கொள்ளப் படுகின்றன. தென்னை மற்றும் பனை மரங்கள் அதிகமாக வீட்டுக்கு வீடு காணப்படுகின்றமையால் இவை சார்ந்த உற்பத்திகள் அதிகளவில் மேற்கொள்ளப் படுகின்றன. தும்புத்தடி, ஈர்க்குத்தடி, பெட்டி, கடகம் தயாரித்தல், அப்பளம் தயாரித்தல், புற்பாய் தயாரித்தல் எனப் பலதரப்பட்ட கைத்தொழில்களை மேற் கொள்கின் றனர். புறாமார்க் வெடி என்ற பெயரில் 1980களில் பிரபலம் பெற்றிருந்த வெடி வேரற்கேணிப் பிரதேசத்தில் தயாரிக்கப் பட்டதாகும்.

**மட்டுவில் ஆயம்**

வலிகாமத்தையும் தென்பகுதி யையும் இணைக்கும் பிரதான போக்கு வரத்துப் பாதையாக மட்டுவில் ஊடாகச் செல்லும் பிரதான வீதியே இருந்திருக் கின்றது. இதனால் வண் ணாத்திப் பாலம் தாண்டியபின் மட்டுவிலுக்குள் நுழையும் பகுதி ஆயப்பகுதி என அழைக்கப்பட்டது. ஆயம் என்பது வரி விதிக்கும் இடம் எனப் பொருள்படும். ஒல்லாந்தர் காலத்தில் இவ்வாறான வரி நடைமுறை இருந்த தாகத் தெரிகின்றது. இப் பிரதேசத்தில் மாட்டு வண் டிகள் இளைப்பாறக் கூடியதான இடக் கட்டமைப்பை இன்றும் காணலாம்.

காளை மாடுகள் நீர் அருந்தக் கூடிய குளம், ஆவுரோஞ்சிக்கல் என்பன ஆயத்தை அடையாளப் படுத்துகின்றன.

**மட்டுவில் பிரதேச ஆலயங்கள்**

2015 ஆம் ஆண்டுக்குரிய தரவுகளின்படி மட்டுவில் பிரதேசத்தில் 36 இந்து ஆலயங்களும் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட ஆலயங்களாகக் காணப்படுகின்றன. கிறிஸ்தவ தேவாலயம் மட்டுவில் கிழக்கில் அமைந்துள்ளது. கைதடி நுணாவிலில் 07 இந்து ஆலயங்களும் தென்மட்டு விலில் 03 இந்து ஆலயங்களும் மட்டுவில் நுணாவிலில் 05 இந்து ஆலயங்களும் மட்டுவில் மத்தியில் 07 இந்து ஆலயங்களும் மட்டுவில் வடக்கில் 05 இந்து ஆலயங்களும் மட்டுவில் கிழக்கில் 01 இந்து ஆலயமும் சந்திரபுரத்தில் 08 இந்து ஆலயங்களும் பதிவு செய்யப்பட்ட ஆலயங்களாக உள்ளன.

இப்பிரதேசத்தின் முதலாவது ராஜகோபுரம் உள்ள ஆலயம் மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோவில் என்பது குறிப்பிடத்தக்கது. மூன்று தளங்கள் கொண்ட சிறிய ராஜகோபுரம் இந்த ஆலயத்தில் அமைக்கப்பட்டது.

மட்டுவில் பிரதேசத்தின் தொன்மை வாய்ந்த ஆலயமாக அமைந் திருப்பது மட்டுவில் கல்வத்துச் சிவன் கோவில் ஆகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க தொன்மையான ஆலயம் என்ற பெருமை மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு உண்டு. பன்றித்தலைச்சி அம்மன் கோவிலின் பங்குனித் திங்கள் உற்சவம் விசேடமானது. இவ்வுற சவத்தில் பங்கேற்க குடா நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வருவது வழமையாகும்.

**மட்டுவில் கல்வத்துச் சிவன்கோவில்**

இக்கோவில் அமைந்துள்ள பிரதேசம் வத்தை என்ற ஈற்றுப் பெயருடன் முடிவடைகின்றமையால் துறை முகத்துடன் இப்பிரதேசம் தொடர்பு பட்டிருக்க வேண்டும். வலிகாமம் கிழக்கையும் தென்மராட்சியையும் பிரிக்கும் கடல் நீரேரி இதன் எல்லையில் காணப்படுகின்றது. இதன் தொடர்ச்சி யாகவே வத்தை என்ற ஈற்றுப் பெயர் கொண்ட வாதரவத்தையையும் நோக்க வேண்டும். ஆயினும் வத்தை என்பதைச் சிங்களச் சொல்லாகக் கருதித் தோட்டம் எனப் பொருள் கொண்டு விளக்கம் தேடுவோரும் உள்ளனர்.

இவ்வாறு ஒரு துறையுடன் தொடர்புபட்ட சிவன் கோவில் ஆதலால் கல்வத்தைச் சிவன் கோவில் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். இந்த ஆலயம் ஒரு காலத்தில் சிறப்புற்ற மூத்த சிவாலயமாக விளங்கியிருக்கின்றது. அக்காலத்தில் கல்லினால் கட்டப்பட்ட கோவில் என்ற பொருள் பட கல்வைத்த சிவன் கோவில் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

இக்கோவிலின் கட்டடக் கலை மரபு திராவிடப் பாணியில் அமைந் திருப்பதும் இதன் தொன்மைக்குச் சிறந்த சான்று ஆகும். " தற்போதுள்ள ஆலயம் தோற்ற அமைப்பில் சிறியதாக இருந்

தாலும் பழங்காலத்தில் மிகப்பெரிய ஆலயத்திற்குரிய அனைத்து அம்சங் களும் இவ்வாலயத்தில் இருந்தமைக் கான ஆதாரங்கள் இங்கு செறிந்து காணப்படுகின்றன" எனப் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார்.

இந்த ஆலயத்தில் மிகப் பழைமையான கோமுகி காணப்பட்டிருக் கின்றது. 1990 காலப்பகுதியில் இது இருந்தது ஆயினும் தற்போது இது அகற்றப்பட்டு விட்டது. இது பெரும்பாலும் இலங்கையில் கி.பி. 12 ஆம் 13 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் அமைக் கப்பட்ட ஆலயங்களில் காணப்பட்ட கோமுகியுடன் ஒத்திருந்ததாக பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார்.

இவ்வாலயத்தின் இறைவன் சந்திரமௌலீசர். அம்பாள் சாந்தநாயகி. தீர்த்தம் சந்திரபுஷ்கரணி என அழைக் கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தை அரசாட்சி செய்த சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி தலயாத்திரை மேற்கொண்டபோது வட இந்தியாவின் திருக்கேதாரத்திற்குச் சென்று வழிபாடாற் றினான். அங்கிருந்து வரும்போது கைலாசநாதர் விக்கிரகத்தையும் தன்னுடன் எடுத்துவந்து நல்லூரில் கைலாசநாதருக்குக் கோவில் அமைத் தான்.

போர்த்துக்கேயர் காலத்தில் கோவில்கள் இடித்து அழிக்கப்படும் சூழலில் நல்லூர் கைலாசநாதர் கோவிலும் இடித்து அழிக்கப்பட்டது. இதன்போது கோவில் குருக்கள் கைலாசநாதரை பாதுகாப்பாக மட்டுவில் பிரதேசத்திற்கு கோப்பாய் கைதடி தரவை வழியாக வண்டிலில் எடுத்து வந்து கல்வத்துச் சிவன்கோவில் திருமஞ்சனக் கிணற்றில் இட்டுச் சென்றார். இச்சம்பவம் இடம்பெற்ற சில நாட்களில் போர்த்துக்கேயர் கல்வத்துச் சிவன்கோவிலையும் இடித்து அழித்தனர்.

காலப்போக்கில் சந்திரமௌலீசப் பெருமானுக்குக் கும்பாபிஷேகம் இடம் பெற்ற வேளை கிணற்றில் இருந்து பெறப்பட்ட கைலசாநாதரையும் வைத்து கும்பாபிஷேகம் செய்தனர் என இ.சிதம்பரப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

திருமஞ்சனக் கிணற்றில் கண் டெடுக்கப்பட்ட சிவலிங்கப் பெருமானாரை சந்திரமௌலீசர் எனப் பெயர் சூட்டி வழிபாடாற்றியதாக மட்டுவில் அ.சிவசாமிக்குருக்கள் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். (மட்டுவில் கல்வம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் 1976)

ஈழத்தில் எழுந்த சதக நூல்களுள் ஈழமண்டல சதகம் பிரபலமானது. இந்நூல் மட்டுவில் கல்வத்துச் சிவன் கோவில் இறைவனாகிய சந்திர மௌலீசனையே பாட்டுடைத் தலை வனாகக் கொண்டது. மட்டுவில் பெற்ற உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது இந்நூல். இதற்குச் சந்திரமௌலீசர் சதகம் என்ற பெயரும் உள்ளது.

அச்சதகத்தின் ஒரு பாடலை அதன் அமைப்புக் கருதிக் குறிப்பதுவும் பொருத்தமுடையதாகும்.

நீரேறு செஞ்சடை நிருந்தரயல் சாட்சியாய்
நின்றருள் சபாநாயகி
நிகமாக மங்கடுதி செய்நிமல நாயகிமெய்
நித்தியமங் கலநாயகி
காரேறு நெஞ்சினேற் கன்னையாய் முன்னின்று
கருணைபுரி திருநாயகி
கந்தனொடு கடகளிறை முந்துதந் தமரரிடர்
காத்தகட வுளர்நாயகி
பாரேறு சமயங்க ளோராறு மன்பினொடு
பாதுகாத் திடுநாயகி
பரமனரு ளிருநாழி நெற்கொடெண் ணான்கறம்
பாலித்த பெருநாயகி
தாரேறு சுரிகுழற் சாரநா யகிகலுவ
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தல வாசனே.

இந்நூல் 1923 ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் அரங்கேற்றப்பட்டது.

மட்டுவில் கல்வத்துச்சிவன் கோவிலின் பெருமை ஜேர்மனி வரையும் பரந்துள்ளதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். டொட்மூன்ட் நகரத்தில் உள்ள ஆலயம் சாந்தநாயகி அம்பிகா சமேத சந்திரமௌலீசப் பெருமான் ஆலயம் என்றே அழைக்கப் படுகின்றது. மட்டுவில் சிவன் கோவிலின் பிரதம குருவாக இருந்த அப்பாசாமிக் குருக்களின் பேரானாராகிய வண. சி.ஜெயந்திநாதக் குருக்கள் இவ்வாலயத் திற்கு இப்பெயரைச் சூட்டி மட்டுவில் சிவனாரை நினைத்து வழிபாடாற்றி வருகின்றார்.

**மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில்**

பன்றித் தலையையுடைய தெய்வம் என்றும் மாட்டுத்தலையைப் பன்றித் தலையாக்கிய தெய்வம் என்றும், பண்டு தொட்டு இத்தலத்திற்குரியள் என்றும் வெவ்வேறு விளக்கங்களைக் கூறிப் பெருமை பேசத்தக்கது மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில். மார்கழியில் மகோற்சவம், வைகாசி விசாகத்தில் பொங்கல் என விசேடித்த வைபவங்கள் இவ்வாலயத்தில் இடம்பெற்றாலும் பங்குனித் திங்கள் உற்சவந்தான் இவ்வாலயத்தின் தனிச் சிறப்பு. பங்குனி மாதத்தில் வரும் ஒரு திங்கட்கிழமையாவது பன்றித் தலைச் சிக்குப் போய்விட வேண்டும் என்ற உள்ளத்துடிப்பு யாழ்ப்பாணப் பிரதேசச் சைவர்களிடையே காணப்படுகின்றது.

பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயம் இப்போதுள்ள இடத்தில் முன்னர் இருக்கவில்லை என்று குறிப்பிடுகின்றது இவ்வாலயத்தின் 1991 ஆம் ஆண்டுக் கும்பாபிஷேக மலர். அத்திருக்கோவில் இப்போதுள்ள இடத் திற்கு வடக்குப் பக்கமாக இருந் திருத்தல் வேண்டும். அதற்கான செங்கல் கட்டட இடிபாடுகள் வடக்குப் பக்கத்தில் இருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. இன்று நாம் காணும் இடத்தில் இந்த ஆலயம் கி.பி 1750 ஆம் ஆண்டில் நாகர் கதிர்காமர் என்பவரால் வைரக்கற்களைக் கொண்டு கட்டப்பட்டதாக ஆலய வரலாறு குறிப்பிடுகின்றது. 1946, 1955, 1964,

1991, 2012 ஆகிய ஆண்டுகளில் இவ்வாலயத்தில் முக்கிய புனரமைப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுத் திருக்குட முழுக்குப் பெருவிழாக்கள் இடம் பெற்றுள்ளன.

தற்போது ஆலயம் முற்றிலும் புதிய தோற்றத்தில் மூன்று தளங்கள் கொண்ட இராஜகோபுரத்துடனும் அழகிய கோபுர வில் மண்டபத்துடனும் காட்சியளிக் கின்றது. உட்பிரகாரம் எங்கணும் கவின் வேலைப்பாடுடைய தூண்கள் நிரம்பிக் காணப்படுகின்றன.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் தற்போதுள்ள கண்ணகி அம்மனின் (செப்பு) தாமிர விக்கிரகம் 1946 ஆம் ஆண்டிற் பிரதிட்டை செய்யப்பட்டதாகும். இதற்கு முன்னர் கும்பம் வைத்து அதற்குத் தங்கத்தினால் செய்யப்பட்ட பன்றி முகத்தைச் சார்த்தி பூசை செய்யப்பட்டு வந்ததாக அறிய முடிகின்றது. மாட்டுத் தலையைப் பன்றித்தலையாக்கிய அருட் செயலைக் குறிப்பதற்காக இச் செயற்பாடு இடம்பெற்றதென்பர். இவ்வருட் செயலுக்கு ஆட்பட்டவர் ஆலயத்தில் பறை மேளம் அடிக்கும் பக்தர் ஒருவர் ஆவார்.

பசுவை இறைச்சிக்காகக் கொன்று அதன் எச்சங்களைப் கோவிலடியில் புதைத்த பறை மேளம் அடிக்கும் பக்தன் தான் செய்திருக்கக் கூடிய பசுக்கொலைக் குற்றத்திலிருந்து தன்னைக் காப்பாற்று மாறு கண்ணகைத்தாயிடம் முறை யிட்டான். பக்தனின் வேண்டுதலுக்கு இசைந்த அம்மை அவனது கனவில் கிழப் பெண்ணாகத் தோன்றினாள். மறுநாள் இடம்பெறும் விசாரணையின்போது பன்றியையே கொன்று புதைத்ததாகப் பகருமாறு ஆணையிட்டாள். என்ன ஆச்சரியம்! புதைகுழியைத் தோண்டிப் பார்த்தவர் கண்களில் பன்றி இறைச்சியின் எச்சங்களே தென்பட்டன. சமூகத்தின் அடிநிலை மகனொருவன் பெற்ற இப்பேரருட்திறத்திற்கான நன்றி வெளிப் பாடாக பங்குனித் திங்களில் பறையடிப் பவர்கள் கோவலனார் கதையைப் படித்துவந்ததாக அறிய முடிகின்றது. தவிர, வருடப்பிறப்பு, பொங்கல், பங்குனித்திங்கள் உள்ளிட்ட விசேட நாள்களில் பறை முழக்க மிட்டு அம்பிகையை வழிபடும் வழக்கமும் காணப்பட்டது.

பங்குனித்திங்கள் நாள்களில் அதிகாலை முதலே மட்டுவில் வீதிகள் விழிப்படைந்துவிடும். ஆலயத் தீர்த்தக் கேணியில் நீராடி அம்பிகையை வழிபாடு செய்வதே அடியவர் வழக்கம். வெப்ப காலத்தில் ஏற்படும் அம்மை, பொக்குளிப் பான் முதலிய நோய்களைத் தணிக்கும் ஆற்றல் இத்தீர்த்தத்திற்கு உண்டென்ற நம்பிக்கை மிகுதியால் அதிகாலை முதலே நீராடல் ஆரம்பமாகிவிடும்.

பங்குனித்திங்கள் காலத்தில் அம்பிகையின் வீதியுலாவிற்குரித்தான வாகனங்கள் குறித்தும் நிர்வாகத்தினர்

நியமங்களைக் கொண்டிருக்கின்றனர். முதலாம் திங்கள் பகல் இடப வாகனத்திலும் இரவு காமதேனு வாகனத்திலும் இரண்டாம் திங்கள் பகல் சிங்க வாகனத்திலும் இரவு எலி வாகனத்திலும் மூன்றாம் திங்கள் பகல் கைலாச வாகனத்திலும் இரவு சோடிச் சிங்க வாகனத்திலும் நான்காம் திங்கள் பகல் மயில் வானத்திலும் இரவு மஞ்சத்திலும் அம்பிகை உலாவருவாள்.

கண்ணகி ஆகமஞ்சாராத தெய்வமாக, கிராமிய நிலையில் மக்களிடையே போற்றப்பட்டாலும் நாவலரது செல்வாக்கினால் கண்ணகை அம்மன் ஆலயங்களிற் பல, இராஜ ராஜேஸ்வரி அம்மன்கோவில் எனவும் சிவகாமி அம்மன் கோவில் எனவும் புதுமெருகு பெற்றன. மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகையையும் இராஜ ராஜேஸ்வரி அம்மையாகக் கருதியே வேதமந்திரங் கூறியும் ஊஞ்சற்பாக்கள் பாடியும் சேவிக்கின்றனர்.

**மட்டுவில் பிரதேசப் பாடசாலைகள்**

தென்மராட்சிப் பிரதேசத்தில் முதன்முதலாகத் தோற்றம் பெற்ற பாடசாலை என்ற சிறப்பு மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலத்திற்கே உண்டு. 1875 ஆம் ஆண்டில் இப் பாடசாலை நிறுவப்பட்டது. மட்டுவிலைச் சேர்ந்த கதிரேசர் காசிநாதர் என்பவர் வழங்கிய நிலத்தில் உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளையை அதிபராகக் கொண்டு இப்பாடசாலை நிறுவப்பட்டது. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இப்பாடசாலையில் கல்விகற்றார் என்பது இப்பாடசாலைக்குள்ள பெருமைகளுள் ஒன்று. இதனால் இவருக்குப் பாடசாலையில் சிலை நிறுவிப் பெருமைப் படுத்தியுள்ளனர்.

மட்டுவில் பிரதேசத்தில் தற்போதுள்ள பெரிய பாடசாலை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் ஆகும். இது தரம் 06 தொடக்கம் 13 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஆயிரம் பாடசாலைத் திட்டத்துள் உள்ளடக்கப்பட்ட பாடசாலை ஆகும். இப்பாடசாலை அமைந்துள்ள நாற்சந்தி மடத்தடிச் சந்தி என அழைக்கப்படுகின்றது. தொண்டைமானாறு, வல்லிபுரக் கோவில் முதலிய இடங்களுக்கு யாத்திரை செல்வோரின் வசதி கருதி இப் பிரதேசத்தைச் சேர்ந்த நொத்தாரிசு கந்தர் அவர்களால் மடம் ஒன்று நிறுவப்பட்டது. அதனால் இங்குள்ள பாடசாலை மடத்தடிப் பாடசாலை என அழைக்கப்பட்டது.

மட்டுவில் மகா வித்தியாலயம் என பொதுவாக சுட்டப்படும் இப்பாடசாலை 1925 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி நொத்தாரிசு கந்தர் அவர்களால் நிறுவப்பட்டது என இந்து சாதனம் பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்து.

## மட்டுவில் பிரதேச பாடசாலைகள்

| இல | பாடசாலை | கிராம அலுவலர் | பாடசாலை வகை | தற்போதுள்ள மாணவர் எண்ணிக்கை (2016) | பாடசாலையில் உ.ள்ள வகுப்புக்கள் | பாடசாலை ஆரம்பித்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| 01 | மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா | J/311 | 2 | தரம் 01-11 | 133 | 1896 |
| 02. | மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் | J/312 | 1C | தரம் 06-13 | 153 | 1925 |
| 03. | மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் | J/313 | 2 | தரம் 01-11 | 155 | 1875 |
| 04. | மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | J/314 | 2 | தரம் 01-11 | 225 | 1917 |
| 05. | மட்டுவில் வடக்குஅ.த.க. | J/315 | 3 | தரம் 01-05 | 59 | 1959 |
| 06. | கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை | J/309 | 2 | தரம் 01-11 | 177 | 1895 அளவில் |
| 07. | மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | J/309 | 2 | தரம் 01-11 | 134 | 1908 |
| 08. | மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம் | J/315 | 3 | தரம் 01-05 | 36 | 1936 |

| இல. | பாடசாலை | பாடசாலை அடையாள இல. | தொகை மதிப்பீட்டு இல |
|---|---|---|---|
| 01. | மட்டுவில் தெற்கு அ. மி. க. பா | 1003020 | 09371 |
| 02. | மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் | 1003004 | 09355 |
| 03. | மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் | 1003018 | 09369 |
| 04. | மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | 1003019 | 09370 |
| 05. | மட்டுவில் வடக்கு அ. த. க. | 1003044 | 09395 |
| 06. | கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை | 1003021 | 09372 |
| 07. | மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | 1003016 | 09367 |
| 08. | மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம் | 1003045 | 09396 |

*(நன்றி : வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி - 2016 அக்டோபர்)*

மட்டுவில் தெற்கு அமெரிக்கமிசன் பாடசாலையை அவ்வூரைச் சேர்ந்த கார்த்திகேசு அவர்கள் 1896 இல் தொடக்கினார். மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தை நொத்தாரிசு சி. கந்தர் 1925 இல் தொக்கினார். மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தை கதிரேசர் காசிநாதர் 1875 இல் தனது நிலத்தைக் கொடையாக வழங்கித் தொடக்கினார். மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தை 1917ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 25ஆம் திகதி வித்துவான் க. இராமலிங்கம் ஸ்தாபித்தார். கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையை 1895 அளவில் அப்பா வெற்றிவேலு என்பவர் தொடக்கினார். மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயத்தை 1936 இல் மகாலிங்கம் என்பவர் தொடக்கி வைத்தார்.

**மட்டுவிலும் பதிப்புத்துறையும்**

இலங்கையின் முன்னணிப் பதிப்பகங்கள் இரண்டு மட்டுவிலிலேயே தோற்றம் பெற்றன. அவற்றுள் ஒன்று திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பதிப்பகம். மற்றையது மெய்கண்டான் பதிப்பகம்.

**திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பதிப்பகம்.**

இலங்கையில் கி.பி.1667 - 68 ஆம் ஆண்டு தொடக்கம் பஞ்சாங்கம் வெளியிடப்பட்டு வருகின்றது. பிரம்மஸ்ரீ இராமலிங்க முனிவர் வாக்கிய முறைப்படி இப்பஞ்சாங்கக் கணிப்பை ஆரம்பித்தார். பழைய வாக்கியங்களை காலத்திற்கேற்ப பிரயோகிப்பது நடைமுறைக்கு ஒத்து வராது இருப்பதைக் கண்ட பிரம்மஸ்ரீ ஹே.கார்த்திகேய ஐயர் இந்தியாவில் திருக்கணித பஞ்சாங்கக் கணிப்பில் பயிற்சி பெற்று 1887 - 88 தொடக்கம் யாழ்ப்பாணத்தில் திருக்கணித பஞ்சாங்கத்தைவெளியிடத் தொடங்கினார். கால மாற்றத்தில் 1933 - 34 முதல் இத்திருக்கணித பஞ்சாங்க ஆசிரியப் பொறுப்பு மட்டுவிலைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சி.சுப்பிரமணிய ஐயர் அவர்களிடம் சென்று சேர்ந்தது. இவர் கார்த்திகேய ஐயரின் மகளின்புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. 1971 - 72 தொடக்கம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் இக்கணிப்பை மேற்கொண்டு வந்தார். 2016 - 17 தொடக்கம் ஜோதிடமணி சி.ஜெகதீஸ்வர சர்மா அவர்களால் கணிக்கப்பட்டு இப் பஞ்சாங்கம் வெளியிடப் படுகின்றது. இதற்கென மட்டுவிலில் திருக்கணித நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு அங்கு அச்சகமும் காணப்பட்டது. கால சூழமைவிற்கு அமைய 2003 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பதிப்பகம் சாவகச்சேரி நகருக்கு மாற்றப்பட்டது.

திருக்கணித பஞ்சாங்கம் தவிர சோதிட மலர் என்ற மாத இதழையும் திருக்கணித நிலையம் மட்டுவிலில் இருந்து வெளியீடு செய்தது.

**மெய்கண்டான் பதிப்பகம்**

மெய்கண்டான் கலண்டர் மற்றும் டயறிகளை அறியாதார் இருக்கமாட்டார். இவை தற்போது கொழும்பில் உள்ள

மெய்கண்டான் அச்சகத்தில் பதிப்பிக்கப் படுகின்றன. மெய்கண்டான் கலண்டர் முதலில் மட்டுவிலில் இருந்தே வெளி வந்தது. மெய்கண்டான் அதிபர் ஆ. கந்தையா (1892 - 1968) 1919 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மட்டுவில் வடக்கு மருதடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் மெய்கண்டான் அச்ச கத்தை நிறுவினார். 1920 ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பில் நிறுவப்பட்ட மெய்கண்டான் பதிப்பகத்தின் செயற் பாடுகள் பிரபலம் பெற்றன. இப்பிர பலத்திற்கு ஆ.கந்தையா அவர்களின் மருமகனாரான மெய் கண்டான்

நா. இரத்தினசபாபதி அவர்களே காரணம் எனக் குறிப்பிடுவர். மெய்கண்டான் நாட்காட்டி வாக்கிய பஞ்சாங்க அடிப்படையில் வெளியீடு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

**பதிப்பாசிரியர் வே. வல்லிபுரம்**

இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களப் பதிப்பாசிரியர் குழுவில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த வேலுப் பிள்ளை வல்லிபுரம் அவர்களும் இடம்பெற்றிருந்தார். 1960களில் வெளி வந்த பாடநூல்களில் இவரது பங்களிப்பு இருந்தது.

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதம செயற்றிட்ட அதிகாரியாக மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பூ. சுப்பிரமணியம் (1940 - 2016) பணிபுரிந்தார். இவர் அளுத்கம ஆசிரிய பயிற்சிக்கலாசாலையின் விரிவுரை யாளராகவும், GTZ நிறுவனத்தின் கல்விசார் ஆலோசகராகவும் செயற் பட்டுள்ளார். பாடநூலாக்கக்குழுவிலும் அங்கம் வகித்துள்ளார்.

**ஊடகத்துறை**

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த ஒலிபரப்பாளர் தம்பையா உருத்திராபதி 2012 இல் திடீரென மாரடைப்பால் காலமானார். 40 ஆண்டுகளாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ச்சேவையின் நிகழ்ச்சித் தயாரிப்பாள ராகவும் பின் பணிப்பாளராகவும் பணி யாற்றினார். வல்லிபுரக் கோவில் தீர்த்தத் திருவிழாவிற்கான நேர்முக வர்ணனை ஆயத்த வேலைகளின்போது இவரது உயிர் பிரிந்தமை குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளர் உமாசந்திரா பிரகாஷ் (1977) மட்டுவில் அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண் டவர். இவர் 2001 ஆம் ஆண்டில் சக்தி தனியார் வானொலியில் ஒலிபரப்பாளராகக் கால் பதித்து வீரகேசரி நிறுவன ஊடகவியலா ளராகப் பணி யாற்றித் தற்போது சக்தி தொலைக் காட்சியின் முகாமையாளராக உள்ளார். இவர் பொக்கிஷம், நல்லூர்க் கந்தசுவாமி பெருங்கோவில் என்ற நூல்களை ஆக்கி வெளி யிட்டுள்ளார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பிரியா ஆலாலசுந்தரம் (1984) சக்தி தொலைக்காட்சியில் ஊடகவியலாளராகப் பணிபுரிந்தவர். இவர் சிறந்த செய்தி

வாசிப்பாளருக்கான ஊடகவியல் விருதைப் பெற்றுக்கொண்டவர் என் பதுவும் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் இருந்து ஒளிபரப்பாகும் பொலிமர் தொலைக்காட்சியிலும் ஐரோப்பாவில் இருந்து ஒளிபரப்பாகும் ஆதவன் தொலைக்காட்சியிலும் இவர் பணியாற்றி யுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த இராசையா ஜனதன் (1977) சுடர் ஒளி நாளிதழ் மற்றும் ஒளிஅரசி மாத இதழ் என்பவற்றின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் (CEO) ஒளி அரசியின் ஆசிரியராகவும் உள்ளார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த நா.தங்கவேலு உதயன் பத்திரிகையின் சாவகச்சேரி பிரதேசச் செய்தியாளராகப் பணி மேற்கொள்கின்றார்.

மட்டுவில் வேரற்கேணியைச் சேர்ந்த அமரர் இராசலிங்கம் உதயன் செய்தியாளராக பணிபுரிந்துள்ளார்.

**முதல் நொத்தாரிசு**

தென்மராட்சியின் முதலாவது நொத்தாரிசு என்ற பெருமை மட்டுவில் மடத்தடியைச் சேர்ந்த சி.கந்தர் (1867 - 1939) அவர்களையே சாரும். இவரே மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் என்ற மட்டுவில் மகா வித்தியாலயத்தின் ஸ்தாபகரும் ஆவார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த லோச்செல்லப்பா என்பவர் (1870 - 1950) சட்டத்தரணியாக இல்லாவிடினும் சட்ட நுட்பங்களை அறிந்து இந்துபோர்ட் பாடசாலைகளை நிர்வகிப்பதில் சைவப் பெரியார் சு. இராசரத்தினத்திற்கு உறு துணையாக இருந்துள்ளார். இதனால் செல்லப்பாவை மக்கள் லோச் செல்லப்பா என அழைத்தனர்.

**அரசியல்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக விளங்கிய சு. ப. தமிழ்ச்செல்வன் (1967 - 2007) மட்டுவில் தெற்கு சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண் டவர் ஆவார். புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்குப் பின்னர் அதியுயர் அரசியல் தலைவராக இவர் செயற்பட்டார். 23 ஆண்டுகால போரியக்க வாழ்வை மேற்கொண்ட இவர் 2007 ஆம் ஆண்டு நவம்பர் 02 ஆம் திகதி விமானத் தாக்குதலில் கொல்லப் பட்டார். புலிகள் அமைப்பில் பிரிகேடியர் தர நிலையில் இவர் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வைத்தியத்துறை**

சித்த வைத்தியத்துறை சார்ந்து தென்மராட்சியில் பிரசவ விடுதி வசதிகளுடன் கூடிய முதலாவது சித்த மருத்துவ மனையாக மட்டுவில் ஆராக்கிய வாசா வைத்தியசாலை விளங்குகின்றது. இவ்வைத்தியசாலை 1964 இல் நிறுவப்பட்டது. இதனை நிறுவியவர் டாக்டர் பேதுறு பிலிப்ஸ் (1929 - 2006) ஆவார். இவரது தந்தை பேதுறு அவர்களும் சித்த வைத்தியத்துறை சார்ந்தவர் ஆவார். 2000 ஆம் ஆண்டில்

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தம் மற்றும் இடப்பெயர்வைத் தொடர்ந்து இவ்வைத்தியசாலை நவாலிக்குக் குடிபெயர்ந்தது. தற்போது டாக்டர் பிலிப்ஸ் புதல்வி லியோன் புஸ்பராணி தந்தை வழியில் சித்த மருத்துவ சேவையை நவாலியில் மேற்கொள்கின்றார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த டாக்டர் சிதம்பரநாதன் முகுந்தன் (1970) இதய அறுவைச் சிகிச்சை நிபுணராகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரிகின்றார். இன்னும் வைத்தியர்கள் பலர் மட்டுவில் மண்ணிற்குப் பெருமை சேர்ப்பவர்களாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பணியாற்றுகின்றனர்.

**மட்டுவில் பெற்ற விஞ்ஞானி**

உலக அரங்கில் பிரபலமான விஞ்ஞானியாகத் திகழ்பவர் பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன் ஆவார். அமெரிக்கத் தமிழராக வாழும் இவரது பிறப்பிடம் மட்டுவில் ஆகும். ஆசிரியத் தம்பதியரான சிவலிங்கம் பாக்கியம் ஆகியோரது ஆறாவது புத்திரனாகிய இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் பயின்றவர். பின் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி என்பவற்றில் பயின்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் துறை சார்ந்து பட்டம் பெற்றார்.

தற்போது அமெரிக்காவின் சிக்காகோவில் உள்ள நுண்ணியற்பியல் துறை ஆய்வு கூடத்தின் (Microphysics Laboratory) பணிப்பாளராகவும் இலினோஸ் பல்கலைக்கழகத்தில் பௌதிகத்துறை பேராசிரியராகவும் உள்ளார். (Professor of physics at the University of Illinois Chicago and founder of Sivananthan Laboratories in Bolingbrook, USA ) உள்ளார்.

இரவுப் பார்வைத் தொழினுட்பத்தை இவர் விரிவாக்கி யமையால் அமெரிக்க அரசு பயங்கர வாதியாகக் கணித்த பின்லாடனை ஒழித்தது. இதனால் இவரது கண்டு பிடிப்புக்கு மதிப்பளிக்கும் வகையில் வெள்ளை மாளிகை மாற்றத்திற்கான சாதனையாளர் (Champion of Change) என்ற விருதை (2013) வழங்கிக் கௌரவித்தது.

**சிற்பக் கலைஞர்கள்**

மட்டுவிலுக்குப் பெருமை சேர்த்த சிற்பக் கலைஞராக அமரர் வி.ஆறுமுகம் விளங்குகின்றார். இவர் திருநெல்வேலியில் திருமணம் புரிந்தவர். இவரது பெயரால் ஆறுமுகம் சிற்பாலயம் திருநெல்வேலியில் பிரபலம் பெற்றுத் திகழ்கின்றது. மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கிருஸ்ண பிள்ளை கலாமோகன் (1957) சிற்பாசாரியார் ஆறுமுகத்தின் புதல்வரும் தனது மாமனாருமாகிய கலாகேசரி ஆ.தம்பித்துரையிடம் சிற்பம் பயின்றவர். 1976 இல் மாத்தளை முத்துமாரி அம்மன் கோவில் தேர்வேலைகளுடன் தனது மாமனாரின்

கீழ்க் கலைப்பணியை ஆரம்பித்த இவர் தனது முயற்சியில் பன்னிரண்டு தேர்களை உருவாக்கியுள்ளார். சிற்பக் கலைத்திறன் சார்ந்து சிற்பக்கலைச் செல்வன், சிற்பக்கலாமணி, சிற்பக் கலாரத்தினம் முதலிய பல பட்டங்களைப் பெற்றுள்ளார்.

**இசைத்துறை**

தென்மராட்சியின் இசை அடையாள மெனத் தக்க வகையில் இன்று வாழும் கலைஞராக பொன். ஸ்ரீவாமதேவன் (1948) விளங்குகின்றார். மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சங்கீத ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவராவார். தற்போது இணுவிலில் வசிக்கின்றார். தென்மராட்சியில் இன்று இசை ஆசிரியர்களாக உள்ள பலர் இவரது மாணவர்களாக விளங்கியோர் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தமிழ்ப் பாடசாலைகளில் பாடப்படும் "முத்து முத்தான சித்திரங்கள்" என்ற ஆசிரியர் கீதத்தை இயற்றியவர் இவர் என்பது பெருமைகொள்ளத்தக்கதாகும்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பரமேஸ்வரனும் குறிப்பிடத்தக்க இசைப் பணிகளை ஆற்றி வருகின்றார். தற்போது தமிழகத்தில் இசைபயின்று மட்டுவிலுக்கு வருகை தந்துள்ள தெ.திருவேரகன் மட்டுவிலில் இசைக் கலையை வளர்த்துச் செல்லக்கூடிய நம்பிக்கை தருபவராக விளங்குகின்றார்.

மட்டுவிலைச் சேர்ந்த சி. சிவகாந்தன் ஆசிரியர் தனது தாய் தந்தையரது நினைவாக சிவநடனம் இசைநடனப் பள்ளி என்ற அமைப்பை கடந்த 23.10.2016 இல் ஆரம்பித்துள்ளார்.

**இலக்கியம்**

மட்டுவில் கல்வியில் மேலோங்கி யிருந்த பதி என்பதற்கு அணி சேர்ப்பதாக பத்தொன்பதாம் மற்றும் இருபதாம் நூற்றாண்டின் இலக்கியகாரர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் மட்டுவிலைச் சேர்ந்தவர்களாக இருப்பதைக் குறிப்பிட முடியும்.

**உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை**

உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை (1848 - 1930) மட்டுவிலில் பிறந்தவர். ஊர்ப்பெயரையும் முதல் எழுத்தாகக் குறிப்பிடும் வழக்கத்தினால் மட்டுவில் கணபதிப்பிள்ளை வேற்பிள்ளை என்பதை ம.க. வேற்பிள்ளை எனக்கையாண்டுள்ளார்.

ஆறுமுகநாவலரிடத்திலும் அவரது மருகர் வித்துவ சிரோண்மணி ந.ச. பொன்னம்பலபிள்ளையிடத்திலும் பாடம் கேட்ட பெருமைக்குரியவர். 1875 இல் மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தை நிறுவியபோது அதன் முதல் அதிபராகச் செயற்பட்டார்.

1907 ஆம் ஆண்டில் சிதம்பரத்திற்குத் தலயாத்திரை மேற் கொண்டு அங்கே உள்ள நாவலர் பாடசாலை அறங்காவலரின் வேண்டு கோளை ஏற்று சிதம்பரத்திலேயே தங்கினார். அக்

காலத்தில் திருவாதவூரடிகள் புராணத் திற்கு உரை எழுதினார். இப்புராணத் திற்கான உரை நூல்களுள் இவருடைய உரை நூலே இன்றும் கோவில்களில் பயன்படுத்தப்படுகின்றது.

மேலும் அபிராமி அந்தாதி பொழிப்புரை, கௌரி நூல் விளக்க உரை, வேதாரணிய புராண உரை முதலிய உரை நூல் களையும் எழுதினார்.

1922 ஆம் ஆண்டில் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்த அவர் தனது குலதெய்வமாகிய மட்டுவில் சந்திர மௌலீசர் மீது சந்திரமௌலீசர் சதகம் என்ற ஈழமண்டல சதக நூலைப் பாடினார். இந்நூல் 1923 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் அரங்கேற்றப்பட்டது. இவரது பிள்ளைகள் ஐவருள் குருகவி மகாலிங்க சிவம், ம.க.வே. திருஞானசம்பந்த பிள்ளை ஆகியோர் இலக்கியத்துறையில் பிரகாசித்துள்ளனர்

**குருகவி மகாலிங்கசிவம்**

குருகவி மகாலிங்கசிவம் (1891 - 1941) பரீட்சை எடுக்காத பண்டிதர் எனச் சிறப்பித்து அழைக்கப்படும் புலமையாளர். உரையாசிரியரும் தமிழாசிரியருமாகிய ம.க.வேற்பிள்ளையின் மூன்றாவது புதல்வர். கோப்பாய் ஆசிரிய கலா சாலையில் 1923 தொடக்கம் இறக்கும் வரை விரிவுரையாளராகப் பணியாற்றி யுள்ளார்.

சிறு வயதில் இருந்தே கவி பாடும் வல்லமை பெற்றிருந்த இவர் பழனிப் பதிகம் என்ற ஆக்கத்தை எழுதினார். ஈழ மண்டல சதகம், இராமநாத மான்மியம், கணேசையர் மலர், ஈழகேசரி மலர் ஆகியவற்றில் இவர் எழுதிய சில சிறப்புப் பாயிரங்களும், சில தனிப்பாடல்களுமே இன்றுள்ளன. காமாட்சி அன்னை, புன்னெறி விளக்கு ஆகியன இவர் பாடிய தனிப்பாடல்களில் சில. 1939 இல் ஈழகேசரி ஆண்டு மலரில் அன்னை தயை என்ற சிறுகதையை எழுதியுள்ளார்.

பண்டிதர் ம. க. வே. திருஞானசம்பந்தர்

இந்துசாதனம் பத்திரிகையின் ஆசிரி யராகத் திகழ்ந்த பண்டிதர் ம.க.வே. திருஞானசம்பந்தர் (1885 - 1955) மட்டுவில் உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளையின் மூத்த புதல்வர் ஆவார்.

இலங்கையின் ஆரம்பகால நாவலாசிரியர்களுள் ம.க.வே. திருஞான சம்பந்தரும் ஒருவர். உலகம் பலவிதம், கோபால நேசரத்தினம், காசிநாதர் நேசமலர் ஆகிய நாவல்களை எழுதினார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றிய இவர் இந்துசாதனம் பத்திரிகையின் உதவி ஆசிரி யராக 1912 தொடக்கம் எட்டு வருடங்களும் தொடர்ந்து அதன் ஆசிரியர் த.கைலாசபிள்ளை அவர்கள் அமரத்துவம் அடைந்தபின் பத்திரிகையைப் பொறுப் பேற்று 32 ஆண்டுகளாக ஆசிரியப் பணியையும் மேற்கொண்டார்.

சைவபரிபாலன சபையின் செயலாளராக விளங்கி சமயப்பணி புரிந்துள்ளார்.

### இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (1899 - 1986) மட்டுவிலின் அடையாளமாக இன்றும் கொள்ளப்படும் பெருமைக்குரியவராவார். மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைக் கற்ற இவர் தனது 19 ஆவது வயதில் வண்ணார் பண்ணை நாவலர் காவிய பாடசாலையில் சேர்ந்து தமிழ் பயின்றார்.

1929 ஆம் ஆண்டு தொடக்கம் 1959 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் போதிக்கும் விரிவுரையாளராகப் பணி யாற்றினார். 1951 ஆம் ஆண்டு திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்ற தமிழ் விழாவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆற்றிய உரையைப் பிரசுரித்த தினகரன் பத்திரிகை அவரைப் பண்டிதமணி என சிறப்பித்துச் செய்தி பிரசுரித்தது. அன்று முதல் அவரை யாவரும் பண்டிதமணி என அழைக்கலாயினர்.

1978 இல் இலங்கைப் பல்கலைக் கழகம் அவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

இலக்கியவழி, பாரத நவ மணிகள், அன்பின் ஐந்திணை, கம்பராமாயணக் காட்சிகள், இருவர் யாத்திரிகர்கள் முதலிய நூல்களை எழுதியுள்ளார். யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என இவர் எழுதிய கட்டுரை பிரபலமானது. மேலும் கந்தபுராண போதனை, அத்வைத சிந்தனை, கோயில் முதலிய சமய தத்துவ நூல்களையும் எழுதியுள்ளார். கந்த புராண தட்ஷ காண்டத்திற்கு இவர் எழுதிய உரை இவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது.

### மட்டுவில் ஆ. நடராசா

மட்டுவில் ஆ. நடராசா (1928 - 2014) ஆசிரியராகப் பணியாற்றியவர். ஈழநாடு, உதயன், சஞ்சீவி, தினகரன், தினக்குரல் முதலிய பத்திரிகைகளில் அரசியல், இலக்கிய, சமயக் கட்டுரைகளை எழுதியுள்ளார். சந்திரமௌலீசர் ஆலய வரலாறு, ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய வரலாறு, கந்தபுராணச் சிந்தனைகள், மூவர் தமிழ், ஒல்லுடை ஞானவைரவர் ஆலய வரலாறு, சூரசங்காரம், திருமுறை போற்றும் தெய்வம், திருமந்திரத்தில் வாழ்வியல், பன்றித்தலைச்சிக் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள், சிவஞான போதச் சிற்றுரை ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

### மட்டுவில் நா. நல்லதம்பி

மட்டுவில் நாகமுத்து நல்லதம்பி (1928) மட்டுவில் வடக்கைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றிய இவர் 1971 ஆம் ஆண்டில் எழுத்துத் துறையில் பிரவேசித்தார். இலக்கிய அமுதம், திருக்குறள் நெறியில் இலக்கியச் சிந்தனைகள் ஆகிய கட்டுரை நூல் களையும் மட்டுவில் பன்றித்தலைச்சி தோத்திரப் பாக்கள், கண்ணகை அம்மன்

புகழ்மாலை, வீரகத்தி விநாயகர் பிள்ளைத்தமிழ் முதலிய தோத்திர நூல்களையும் ஆக்கியுள்ளார். மட்டுவில் மாகாளி அம்மன் திருவருட்கூடம் வழங்கிய செந்தமிழ் அறப்புலவர், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி பிறந்தநாளை ஒட்டி வழங்கப்படும் "சிவத்தமிழ் விருது" தென்மராட்சி பிரதேச செயலகம் வழங்கிய கலைச்சாகரம் விருது, 2016 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண "முதலமைச்சர் விருது" யாழ். மாவட்ட கலாசாரப் பேரவை வழங்கிய "யாழ் முத்து விருது" ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். அத்தோடு மட்டுவில் மக்களால் "இலக்கியச்செம்மல்" எனும் பட்டம் அளித்து 9-10-2016 இல் கௌரவிக் கப்பட்டார்.

**மட்டுவில் கா. சிவபாலன்**

மட்டுவில் கா. சிவபாலன் (1952) இவ்வூரைச் சேர்ந்த கந்தர் காசிநாதரின் நான்காவது புதல்வர் ஆவார். நைட்டிகப் பிரம்மச்சாரியான இவர் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அலுவக உத்தியோகத்தராகப் பணிபுரிய ஆரம்பித்து சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் அன்புக்கும் நம்பிக் கைக்கும் பாத்திரமானவராக விளங் கினார். தற்போது தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான நூலகத்தில் நூலகராகப் பணியாற்றும் இவர் சைவசமயச் சிறப்புக்களையும் பண்டிதமணி மற்றும் சிவத்தமிழ்ச்செல்வி போன்றோரது பெருமைகளையும் கட்டுரைகளாகப் பத்திரிகைகளில் எழுதி வருகின்றார். இவரது தந்தையார் காலமானபோது இவர் எழுதி வெளியிட்ட காசிநாதர் மான்மியம் என்ற நூலில் மட்டுவில் பதிக்குப் பெருமை சேர்த்த 30 பெரியோர்களைப் பற்றிப் பதிவு செய் துள்ளார்.

**நாவலாசிரியர் கே. ஆர். டேவிட்**

கே. ஆர். டேவிட் (1945) மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1966 ஆம் ஆண்டு முதல் எழுதி வருகிறார். நாவல், குறுநாவல், சிறுகதை, உருவகக்கதை, இலக்கிய, அரசியல் ஆய்வு எனப் பல்துறைகளில் எழுதி வருபவர். தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

1966 இல் சுதந்திரன் பத்தி ரிகையின் ஊடாக எழுத்துலகில் பிரவேசித்த இவர், வரலாறு அவளைத் தோற்றுவித்தது என்ற நாவலை எழுதினார். இது 1976இல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. மேலும் பாலைவனப் பயணிகள், ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை, வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைகள் ஆகிய குறுநாவல்களையும் ஒருபிடிமண் என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளி யிட்டுள்ளார்.

இவர் எழுதிய எழுதப்படாத வரலாறு என்ற சிறுகதை 2009 இல் அமுலாகிய தரம் 08 தமிழ் மொழியும்

இலக்கியமும் பாடநூலில் இடம்பெற்றது. 2006 - 2008ஆம் ஆண்டுகளுக்குரிய கனக செந்தி கதா விருது, 2011 இல் கலாபூஷணம் விருது, 2013 இல் சிறந்த எழுத்தாளருக்கான இதழியல் விருது, "மண்ணின் முனகல்" என்ற சிறுகதைத் தொகுதிக்கு 2013 ஆம் ஆண்டுக்கான நாமக்கல் கு. சின்னப்பபாரதி அறக் கட்டளை இலக்கிய விருது, 2013 இற்கான தமிழியல் விருது (பாடுகள் என்ற சிறுகதைத் தொகுதிக்கு வழங் கப்பட்டது.) எனப் பலவிருதுகளைப் பெற்றுள்ளார்.

**மட்டுவில் ஞானகுமாரன்.**

மட்டுவிலைச் சேர்ந்த புலம்பெயர் எழுத்தாளர். "மட்டுவில் ஞானக்குமாரன்" என்ற பெயரில் கவிதை, சிறுகதை, மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள், குறுந்திரைப்பட இயக்குநர் என பல துறைகளில் பங்களித்து வருகின்றார். மிக இளம் வயதிலேயே ஜேர்மனியில் வசிக்க ஆரம்பித்த இவர் "வசந்தம் வரும் வாசம்" (2004, ஜேர்மனி), "முகமறியாத வீரர்களுக்காக" (2000, ஜேர்மனி), "சிறகுமுளைத்த தீயாக" (2011) ஆகிய கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

**க. அருந்தவராஜா (ஜெனீவா)**

க. அருந்தவராஜா (1963) மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட புலம்பெயர் படைப்பாளி ஆவார். தற்போது சுவிஸ்லாந்தில் வாழ்கிறார். ஆசிரியராகப் பணியாற்றிய இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் மற்றும் ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் என்பனவற்றில் கல்வித்துறை சார் வளவாளராகச் செயற்பட்டுள்ளார்.

கிராமத்தின் சிரிப்பு (2003), புலம்பெயரும் மண் வாசம் (2010), குடும்பத்துள் வாழ்தல் (2010), சுவிற்சர் லாந்து ஒரு முன்னுதாரணம் ( 2015) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். புலம்பெயர் நம்மவர் திரைப்படம் ஆகிய அகத்தீ (2016) என்ற திரைப்படத்திற்கு கதையை எழுதியுள்ளார். ஜெனீவா கலை இலக்கியப் பேரவையின் தலைவராகவும் சுவிஸ் யூனிவேர்சல் கல்லூரியின் நிர்வாக இயக்குநராகவும் விளங்குகின்றார்.

**மட்டுவில் வன்முறை**

இலங்கை இந்திய கூட்டு உடன் படிக்கையின் ஊடாக 1987 ஆம் ஆண்டில் இந்தியப் படையினர் இலங் கைக்கு வருகை தந்தனர். இப்படை யினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 1987 இறுதியில் போர் மூண்டது. புலிகளின் பதுங்கு பிரதேசமாக மட்டுவில் பகுதியும் விளங்கியது. இதனால் கோபம் கொண்ட படையினர் 1988 ஆம் ஆண்டில் ஒரு நாள் மட்டுவில் சரசாலை இளைஞர் களைச் சுற்றி வளைத்துப் பிடித்து மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் வீதியைச் சுற்றி வலம்வருமாறு செய்து ஆங்காங்கே கொட்டன்களைக் கொண்டு கடுமையாகத்

தாக்கினர். இந்தச் சம்பவத்தின் பின்னர் மட்டுவிலைச் சேர்ந்த இளையோர் பலர் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்தனர்.

2000 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தென்மராட்சி இடப்பெயர்வின்போதும் மட்டுவிலைச் சேர்ந்த மக்கள் வன்னி, வடமராட்சி, வலிகாமம் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர். இதனால் மட்டுவில் மற்றும் அதனை அண்டிய பகுதியினரின் குடித்தொகை குறைவுற்றது. 2001 ஆம் ஆண்டில் மீளக் குடியேற அனுமதிக்கபட்ட போதும் குடித்தொகையில் சிறு தொய்வு ஏற்பட்டது.

**நிறைவுரை**

தென்மராட்சியின் தொல்சீர்ப் பதிகளுள் ஒன்றாக விளங்குகின்ற மட்டுவில் இன்று பல அபிவிருத்திகளை காண வேண்டிய கிராமமாக விளங்கு கின்றது. விவசாயம், கைத்தொழில், உற்பத்தி, வாழ்வாதாரம் என அனைத்துத் துறைகளிலும் இதன் உயர்ச்சி எட்டப்பட வேண்டும்.

தென்மராட்சியில் படித்தவர்கள் அதிகம் வாழ்ந்த கிராமம், முதன் முதலில் பாடசாலையை நிறுவிய கிராமம் தனித்துவ விவசாயச் செய்கைக்குரிய கிராமம், பிரபல வழிபாட்டுத் தலங் களைக் கொண்ட கிராமம் என்ற பெருமை மட்டுவிலுக்கு உண்டு. மாண்புறு மட்டுவில் என்ற பெருமைக்கு இக்கிராமம் அன்றும் இன்றும் என்றும் உரித்துடையதே.

*(இஃது கடந்த **09.10.2016** அன்று மட்டுவில் சந்திரமௌலீச வித்தி யாலயத்தில் நடைபெற்ற மட்டுவில் நா. நல்லதம்பி அவர் களின் பாராட்டு விழாவின் போது ஆற்றப்பட்ட சிறப்புரையின் புதுக்கிய எழுத்துரு ஆகும்.)*

## விழா நாயகர் கௌரவிப்பு

- பொன்னாடை போர்த்தி மாலை சூட்டுதல்
- "சமூக ஜோதி" என்னும் கௌரவ பட்டம் வழங்கி கௌரவித்தல்

கௌரவித்து வாழ்த்துபவர் : திரு.க.அருந்தவபாலன் அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர்)

- வாழ்த்துப்பா வழங்குதல்

பா இசைப்பவர் : திரு.தெ.திருவேரகன் அவர்கள்
வாழ்த்துக்கவி : கவிஞர் த.நாகேஸ்வரன் அவர்கள்

- சபையோர் கௌரவிப்பு
- ஏற்புரை : விழா நாயகர் அவர்கள்
- நன்றியுரை : "தமிழ்க்கவி" திரு.செ.சுதாகரன் அவர்கள்
(பிரதம முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி)
- நிகழ்ச்சித் தொகுப்பு : திரு.க.க.ஈஸ்வரன் அவர்கள்
(தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி தென்மராட்சிக் கல்வி வலயம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**


**விழா ஏற்பாட்டுக் குழுவினர்.**

அழைப்பிதழ் அன்பளிப்பு : சிவரஞ்சனம் ஒவ்செற் பிறின்டேர்ஸ்
பலாலி வீதி, கோண்டாவில். 077 3068982

உ
சிவமயம்

திருக்கணித பதிப்பக முகாமையாளர்
மட்டுவில்
**உயர்திரு.காசிநாதர் சிவஞானசுந்தரம்**
அவர்களின்

# மணிவிழாவும்
# "மாண்புறு மட்டுவில்"
# நூல் வெளியீட்டு விழாவும்



காலம் : 30.10.2016 ஞாயிற்றுக்கிழமை
பி.ப 2.30 மணி
இடம் : யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
அருணாசலம் மண்டபம்
தலைவர் : திரு.ந.சர்வேஸ்வரன் அவர்கள்
(முதல்வர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

## நிகழ்ச்சி நிரல்

- சங்கத்தானை முருகன் ஆலயத்தில் இருந்து விழா நாயகரை அழைத்து வருதல்.
மங்கல இசை : "நாதகான இளவல்கள்"
வி.சித்தார்த்தன், வி.பிரதித்தன் குழுவினர்
- மங்கல விளக்கேற்றுதல் :
Dr.ச.அம்பிகைபாகன் அவர்கள்
(ஓய்வுநிலை வைத்தியர்)
திரு.செ.சுப்பிரமணியம் அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர்)
- இறைவணக்கம் :
திருமதி.சுந்தரவல்லி ஆனந்தராசா அவர்கள்
(சங்கீத ஆசிரியை)
- வரவேற்புரை : திரு.இ.இரவீந்திரன் அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர்)
- ஆசியுரை : ஜோதிடமணி சி.ஜெகதீஸ்வர சர்மா அவர்கள்
(திருக்கணித ஜோதிடம், கொழும்பு)
- தலைமையுரை : தலைவர் அவர்கள்



### வாழ்த்துரைகள்

1. பேராசிரியர் செல்வி.வசந்தி அரசரத்தினம் அவர்கள்
(துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)
2. பேராசிரியர் திரு.கந்தசாமி அவர்கள்
(பீடாதிபதி, தொழில்நுட்ப பீடம், யாழ் பல்கலைக்கழகம்)
3. பேராசிரியர் தி.வேல்நம்பி அவர்கள்
(பீடாதிபதி, முகாமைத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்)
4. திருமதி.அ.வேதநாயகம் அவர்கள்
(ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்)
5. திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர்)
6. திரு.ந.ஜெயகுமாரன் அவர்கள்
(அதிபர், யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

கவி வாழ்த்து : திரு.அ.வாசுதேவா அவர்கள்
(அமைப்பாளர், தென்மராட்சி இலக்கிய அணி)

### நூல் வெளியீடு

நூல் : "மாண்புறு மட்டுவில்"
வெளியிட்டு வைப்பவர் : திரு.யோ.ஜெயக்குமார் அவர்கள்
(ஓய்வுநிலை உதவிப்பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்)
முதற்பிரதி பெறுபவர் : திரு.ந.சிவபாலன் அவர்கள்
(தலைவர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)
வெளியீட்டுரை : "செஞ்சொற் சொல்லருவி"
திரு.ச.லலீசன் அவர்கள்
(பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை)

### பாராட்டுரைகள்

1. திரு.க.எழிலழகன் அவர்கள்
(அதிபர், யா/மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயம்)
2. சட்டத்தரணி திரு.கேசவன் சயந்தன் அவர்கள்
(வடமாகாண சபை உறுப்பினர்)
3. திரு.வ.ஶ்ரீபிரகாஸ் அவர்கள்
(உபதலைவர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)



யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாசாலைக்கு
காணி தர்மசாசன உறுதி வழங்கும் போது




வரவேற்புரை நிகழ்த்தும் போது




நல்லதம்பி ஆசிரியர் கௌரவிப்பு விழாவின் போது

அச்சுப்பதிப்பு : சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில். 077 3068982